# வாழ்க்கையோ கவலையோ

(ஒரு கற்பனைக் கவிதை)

கோவை கிழார்

கோவை நிலையப் பதிப்பகம் லிமிடெட்

# வாழ்க்கையோ கவலையோ

(ஒரு கற்பனைக் கவிதை)

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல் துறை

கோவை கிழார்

கோவை நிலையப் பதிப்பகம் லிமிடெட்

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 1530
நன்கொடை எண்: 1530



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

**27–1–1979**

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல் துறை.

1951

## பொருள் அடக்கம்.


| | | | பக்கம். |
|---|---|---|---|
| **க. மொழிதல் :** | | | |
| முன்மொழி பகரல் | ... | ... | 1 |
| **உ. நினைவு :** | | | |
| 1. கவலையாதோ | ... | ... | 4 |
| 2. அவலம் ஏனோ | ... | ... | 6 |
| **ங. வாழ்வு :** | | | |
| 3. வாழ்க்கைத் தொடக்கம் | ... | ... | 8 |
| 4. வறுமையும் ஏனோ | ... | ... | 10 |
| 5. குழவிப் பருவம் | ... | ... | 12 |
| 6. குடும்பப் பெருக்கு | ... | ... | 15 |
| 7. பெருக்கில் குறுக்கு | ... | ... | 18 |
| 8. வேலை அமைவு | ... | ... | 21 |
| 9. இழவு ஒன்று | ... | ... | 24 |
| 10. தாயும் தணந்தாள் | ... | ... | 28 |
| 11. தனியள் வாழ்க்கை | ... | ... | 32 |
| 12. நாட்பணி நிற்றல் | ... | ... | 34 |
| 13. பூப்புப் பருவம் | ... | ... | 36 |
| 14. காதலில் கடிமணம் | ... | ... | 38 |
| 15. இல்லற மகிழ்வு | ... | ... | 40 |
| 16. குழவியின் தோற்றம் | ... | ... | 42 |
| 17. அக்காள் வருகை | ... | ... | 44 |
| 18. குடிதனில் அடைக்கலம் | ... | ... | 46 |
| 19. கட்களி ஆட்டம் | ... | ... | 48 |
| 20. மீண்டும் வாய்ப்பு | ... | ... | 50 |
| 21. மீண்டும் அவலம் | ... | ... | 50 |
| 22. சூழ்வினைப் பலனோ | ... | ... | 54 |
| 23. தற்கொலை துணிதல் | ... | ... | 56 |
| 24. கொடிய செய்கை | ... | ... | 58 |
| 25. உயிர் தப்பியது | ... | ... | 60 |
| 26. தண்டனை அந்தோ | ... | ... | 62 |
| 27. வீட்டினுள் மாறுதல் | ... | ... | 64 |
| 28. இளையவள் குடித்தனம் | ... | ... | 66 |
| 29. தண்டக் குறைவு | ... | ... | 68 |
| 30. அமைதி உற்றது | ... | ... | 70 |
| 31. மீண்டும் இல்லறம் | ... | ... | 72 |
| **ச. முடிபு :** | | | |
| 32. கவலை பெரிதோ | ... | ... | 74 |

# அன்பளிப்புரை.

தென்னா டதனில் திரளாய்ச் சிறப்பாய்
எந்நா டெனினும் இயல்பாய்ப் பொதுவாய்,

வாழ்க்கையில் கவலையே வழக்கமாய்க் கொண்டு
கேட்கவும் படாஒரு கீழ்மையே பட்டுச்,

சொல்லொணா வருத்தச் சூழ்நிலை இடுக்கிட
மெல்லவே காலம் மிடிதனில் தள்ளும்,

பல்லா யிரமாம் பாமரர் ஏழையர்
இல்லார் வறியவர் ஏங்கிய வாழ்வினை

நேரில் காண்கையில் நிரம்பிநெஞ் செழுந்திடும்
சீரில் கருத்தெலாம் சிறியதோர் கற்பனைக்

காதையாய் வெளிவரக் காய்த்தது இந்நூல்;
வாதையே பட்டுழல் வறியவர் முன்னர்

அன்பளிப் பெனும்செயற் கார்வம் பொங்கிடத்
தென்புடன் உரிமையில் தேர்ந்திடும் அவரையே.

இதன்கண் கதையோ இயல்புறும்கற்பனை,
இதன்கண் பெயர்கள் எடுத்துக் காட்டே;

ஆகவே எவர்க்கும் ஐயம் வேண்டாம்,
சோகமும் சினமும் சூழ்தலும் வேண்டாம்;

ஒருவருக் கெனினும் ஒருசிறி தெனினும்
தருவதில் ஆறுதல் தாங்கிடல் போதும்;

இச்சிறு கவிதைநூல் இயற்றிடும் கடமையில்
மெச்சிடல் இனியேன்? மேலெதும் வேண்டாம்.

ஆக்கியோன்.

அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்
5119 பல்துறை

உ

# வாழ்க்கையோ கவலையோ.

## க. மொழிதல்.

முன்மொழி பகரல்

முன்மொழி பகரின் பின்மொழி அழகோ.

'ஆயிர முகத்தான் அகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவல் அன்றே'

என்று நன்னூல் இயம்பிய தெனினும்
தொன்றுதொட் டதன்படி தொடர்ந்தனருண்டோ?

சிறப்புப் பாயிரம் செப்பிய வண்ணம்
திறப்புரை ஒன்றைத் தெரிந்தனர் உளரோ?

ஆக்கியோன் பெயரை அறைகுவ தன்றி
ஊக்கிட அவர்கதை உணர்த்தினர் இல்லை.

பாயிரம் கருதின பவணந்தி யாரின்
தேயமும் காலமும் தெரிவித் தனரோ?

இந்த வகையில் இயற்றமிழ்ப் புலமைச்
சொந்த சரிதை சுட்டினார் இல்லை.

ஆதலால் பாயிரம் அறையும் வேட்கை
காதலால் அன்றிக் கருதவும் வேண்டாம்.

முன்னுரை என்று மொழிந்தனர் சிலரோ
பின்னுரை படிக்கவும் பேணா தாக்குவர்.

பெருங்கதை ஸ்காட்டெனும் போசிரியன்
வருங்கதை மறைந்திட வளர்த்தனன் முன்னுரை.

அவனுடை முன்னுரை அளந்து படிக்க
எவனுளன்! ஆயின் இயற்பயன் யாதோ?

நேற்று மறைந்த நிறைமொழி ஷாவும்
போற்றினன் முன்னுரை பூவனம் போல.

அவ்வுரை படித்தபின் அறைந்த நூல்புகுந்
தெவ்விதம் படிப்பார் இந்நாள் மக்கள்?

இந்த வகையில் இனியேன் முன்னுரை
சிந்தித் தெழுதல், சிறப்பதில் இலையே.

அவையடக் கத்தை அளவாய்ச் சொல்லச்
சுவைபடும் என்பர் சொல்வல் லாளர்

கம்பர் முதலோர் காட்டிய முறையில்
வம்பொன் றில்லை வளமும் உண்டே

இந்நாட் புலவர் இயம்பிடும் உரையில்
செந்நா சலிக்கச் சேர்ப்பர் அடக்கம்

போதும் இனியென இயம்பும் வண்ணம்
ஏதும் வீசுவர் இயற்றமிழ்ப் பேச்சர்.

சாற்றுக் கவிகளோ சலிப்புறத் தோன்ற
வேற்றுப் புலவர் வீட்டினைத் தேடுவர்

ஈற்றில் அவைகள் ஏற்படு முறையில்
சேற்றைப் பூசிச் செழிப்பைப் போக்குவர்

தெருச்சுமை தாங்கிகள் செய்திடும் அறத்தில்
பெருச்செல வதன்மேல் பெய்திடும் சாசனம்

அதன்முறை சிற்சில அரும்நூல் அதற்கு
பதம்பெறும் சாற்றுப் பாக்கள் என்க.

தனியன் எனச்சொலி தந்துள பாடலோ
சனியன் போலும் சலிக்கும் நூற்கண்.

இவையெலாம் என்சிறு இளங்கதைக் கூட்டில்
சுவையிலா தாகும், சூட்டுதல் கொள்ளேன்.

கருத்துள தென்னில் கருதுவர் மக்கள்
பெருத்திட அதனைப் பேணிலன் யானே

ஒருசிறு கருத்தை ஊட்டிடற் றிதுவெனில்
இருமகிழ் வெய்துவன் இன்புற இருப்பேன்

இந்தக் கருத்தொடு இதைஉல கிற்கே
சிந்தித் திடுவன் சிறியரும் கொளவே.

செந்தமிழ் மக்கள் செழுப்புற வேண்டி
நந்தமிழ் நாட்டில் நடைபெறும் வாழ்க்கை

கவலைக் கிடமாய்க் காய்தல் கண்டு
அவலப் படுதல் அறிந்திடில், அதனைச்

சிறப்புறச் செய்தல் சீரிய குறிக்கோள்
திறப்புற வேண்டித் தீயது கழிய

நலம்பெறு முறையை நாடிட, இக்கதை
புலம்அறி வண்ணம் புகலுவன் இனியே.

## உ. நினைவு.

1. கவலை
யாதோ

கவலை உளதேல்
அவலம் உளதே.

கவலை என்றால் கருத்தும் யாதோ,
அவலப் படுதல் அதன்கருத் தன்றோ?

'கவலப் பட்டேன் காண்'என் றாலோ
'அவலம் உற்றேன் அறி'என் பதுவாம்.

வேறொரு பொருளோ விசாரம் என்று
சாறெனப் பிழிந்து சாற்றித் தருவர்.

'கவலை யுற்றுக் காற்பங் கானேன்
எவனும் உதவிட இயங்கிலன்' என்பர்.

அந்தச் சொல்லிற் கருத்தம் சொல்வோர்
விந்தை இயற்றும் விசாரம் என்பர்.

அதுவும் அன்றி அக்கறைப் பொருளில்
விதியும் கூறி விளக்குவர் உண்டே.

'கந்தன் செப்பினும் கவலை இலை'யெனின்
அந்தக் கூற்றில் அக்கறை தோன்றுமாம்.

'துச்சக் கவலை தூக்கி யெறி'எனில்
அச்சப் பொருளும் அங்கே வருமாம்.

பற்பல நினைவுகள் படரின் அதையும்
சொற்பட உரைப்பர் சுட்டி அதனால்.

'கவலைகொள் நெஞ்சு'எனும் கலித்தொகைக் கூற்றில்
கவலைச் சொல்லில் காட்டுமப் பொருளே.

அவ்வகைப் பொருள்கள் ஐந்தும் உண்டு
செவ்விய நெஞ்சில் செறிந்திடும் பண்பில்.

இடம்,வழி, திணை,கிளை, ஏற்றம் முதலிய
தடப்பொருள் பலவும் தாங்கிடும் அச்சொல்.

அப்பொருள் கொள்ளேம் அடுத்தாற் போலச்
செப்பிடும் கட்டுரைச் சீரில் யாமே.

நெஞ்சில் எழுந்திடும் நிலைகளை அறிந்து
செஞ்சொல் சிலவும் செப்பிட முயல்வேம்.

இந்த வகையில் எம்கட் டுரையைச்
சிந்தித் தெழுதிச் சீருடன் முடிப்பாம்.

கவலைப் பண்பு கலிசெயும் செயலின்
அவலப் படுத்தி அவனியை வருத்தும்,

ஆதலின் அதனை அகல உரைத்துச்
சோதனை செய்துச் சுட்டி உரைப்பாம்.

2. அவலம் ஏனோ

அவலம் பெருகில்
புலம்ப லுருதோ.

'என்னைப் பெண்ணாய் ஏனோ படைத்தான்'
என்னும் புலம்பல் எங்கும் கேட்போம்.

இந்நாள் தானோ எழும்புமிப் புலம்பல்
முன்னாள் கூட முழங்கிற் றன்றோ.

எம்நா டொன்றே ஏற்றிற் றென்கோ
எந்நாட் டிலுமது இயங்கிடும் என்க.

இவ்விதம் புலம்பல் எழுதலும் ஏனோ,
செவ்விய வளத்தில் செறிந்திடும் ஆமோ?

கல்விச் செல்வம் காணில் குறையும்,
செல்வம் தழைக்கின் சிதறி மறையும்,

நாக ரீகமும் நசித்திடும் அப்பழி
ஆக இவைகள் அறுத்திடும் என்பர்.

ஊன்றிப் பார்க்கின் உண்மை அதுவோ,
தோன்றிப் படரும் தொடர்ந்திடும், ஆய்மின்!

பெண்தான் இவ்வணம் பேணில் புலம்பலைக்
கண்தான் கலங்கிக் கசியும் என்றால்,

ஆண்தான் ஏனோ அலறா துள்ளான்
தூண்போல் நிற்பான், துயரம் இலனோ?

ஆணும் துயரம் அடைதல் இயல்பே,
நாணும் நெஞ்சன் நவிலவும் மாட்டான்.

பெண்ணின் மென்மை பெரிதும் இலங்கிக்
கண்ணில் நீரைக் கலக்கிக் காட்டுவள்;

கவலை உறுங்கால் கட்டுள் அடக்கிச்
செவலை காட்டும் செப்பம் இல்லாள்.

தன்வினை ஒருபால் தயக்கம் செய்ய
முன்வினை ஒருபால் மூட்டி வதைக்க

பிறவினை ஏறிப் பிதற்றல் பெருக்க,
அறவினை ஆற்ருள் அவளும் தாங்காள்.

உலகில் எத்தனை உயர்குணப் பெண்கள்
அகலில் அவலம் அடைந்து நெகிழ்வர்?

ஒன்ருே இரண்டோ உரைகல் போல
நன்ருே அலதோ நவிலவும் நாடுவோம்.

இதனுல் எல்லா ஏந்திழை மாரும்
சதமாய்க் கவலையில் சாவார் என்கேல்.

பலபல பெண்கள் பகட்டில் மகிழ்வில்
கலகல எனஉளர், கருதேம் அவர்தமை.

கவலையில் பட்டுக் கண்ணீர் உகுக்கும்
அவலையர் வரலா றறைகுவம் சிறிதே.

3. வாழ்க்கைத் தொடக்கம் — தோன்றும் இடம்போல் தொடருமோ வாழ்வும்.

ஓரூர்ச் சேரியில் உதித்தாள் ஒருபெண்,
சீரூர் செம்மை சிறிதும் அறியாள்.

பிறந்த குடியில் பேன், எலி, மூட்டை
சிறந்த உறவாய்ச் செழித்து வாழ்ந்தன

பெற்ருேர் நிலைமையைப் பெரிதும் விரிக்கக்
கற்ருேர் வேண்டாம், கவலையும் வேண்டாம்.

வறுமைப் படுகுழி வலையில் சிக்கிச்
சிறுமைப் பதவி சிதரு திருந்தார்.

குடிலுக் குள்ளே கூட்டுற வேற்க
அடியில் சார்வார் அருணனும் மதியும்.

அன்னூர் வருகை அறிந்த வருணன்
சின்னாள் எனும் சிலிர்த்து வருவான்.

இம்மூ வுறவினர் எழுந்தருள் வாயில்,
அம்மா, போதா தாமென் றெண்ணி,

வீட்டு முகட்டில் ஓட்டை கண்டு
தாட்டிக மாகச் சமூகம் அளிப்பார்.

இந்தச் சீரிய எழில்கொள் குடிசையில்
வந்து பிறந்தாள் வனிதையும் ஒருநாள்.

யாரே இப்பெண் இகத்தில் உதித்த
ஓரை கணித்தார், ஓர்ந்து வரைந்தார்?

எந்தக் கணிகன் இணங்கி வருவான்,
எந்த இரவலன் ஏற்க வருவான்?

வந்துகை ஏந்தினும் வரிசை கொடுக்கச்
சிந்திடும் பொருளும் தேர்வார் யாரே.

பிறந்த போதோ பேசி மகிழ்க்கச்
சிறந்த நண்பர் சென்றார் அல்லர்

நிலத்தில் உதித்த நேரம் அதனில்
மலத்தைக் கழுவ மங்கையர்த் துணையிலை.

நல்ல வேளை நாரீ மணியோ
மெல்ல நினைவும் மேவாள் கிடந்தாள்.

குழவி வீறிடக் கூக்குரல் கேட்டும்
பழயள் எவளும் பக்கம் வாராள்.

எண்ணெய் மருந்து யாரிடம் உண்டு
வெண்ணெ யுரொட்டி விரும்பினும் வருமோ?

தூக்கத் தெழும்பினர் தொடரும் செயல்போல்
ஏக்கம் கொண்டாள் எழும்பிய தாயாள்.

குழந்தை வாரக் கூடிய வலனும்
இழந்த ஏழையள் எதுவும் செய்யாள்

இந்தச் சிறப்பில் இகத்தில் தோன்றினும்
நிந்தை இன்றி நிலைத்தன ஈருயிர்.

செல்வர் குழவியோ சீறி மறையும்;
அல்லர் குழவியோ அலறியும் வாழும்.

4. வறுமையும் ஏனே — நல்குர வெனும்பேய் பல்குறை ஊட்டும்.

சீதைப் பெயரைச் சிறப்புப் பெயராய்
ஓதை இன்றி உவந்தவட் கிட்டார்.

வாதைப் படலே வாழ்வாய்க் கொண்ட
கோதை போல்வாள் கொடியும் என்கோ!

தோன்றிய நாள்முதல் துணிப்பிணைப் பின்றி
ஈன்றிய பொழுதன் றிருந்தவா றிருந்தாள்.

தாயும் தந்தையும் தமக்கே கிழிசல்
பாயும் கந்தலும் படைத்தார் ஆகில்,

சேய்க்கும் யாதோ சேர்த்திக் காண்பதற்
கேய்க்கும் தொழிலில் இறங்கினர் அல்லர்.

அக்கமா தேவிகள் அம்மணத் தவத்தில்
தக்கவா றிருப்பின், தக்கதோ சேய்க்கும்?

சமணர் தீர்த்தர் சாந்தக் குரவர்
அமணர் ஆகி அமர்ந்தனர் அன்றே!

ஆடை யில்லாள் ஆகின், சீதை
வாடையில் மெலியாள் வறுமையில், அன்றே!

வெய்யிலும் காற்றும் மேனியில் உராயக்
கையிலும் காலிலும் காய்ப்பும் தோன்றும்

பகலில் நிலத்தில் படுத்துக் கிடக்கின்
ககனத் தோற்றம் கசப்புநீக் காதோ?

இரவில் கிழிந்த இரட்டைக் கோணி
பரவும் போர்வைப் படுக்கையும் ஆகும்.

இந்தப் பண்பில் இயங்கிய சீதை,
உந்தும் வாழ்வில் ஊர்ந்து சென்ருள்.

பெற்ருேர் நிலைமை பேசவும் வேண்டாம்,
உற்ருேர் உறவினர் உதவியொன் றில்லார்.

கூலி வேலை கூடின் நலமே,
காலி ஆயின் கடினம் உணவே.

காடும் வயலும் கணவன் சென்ருல்
வீடும் தொழும்பும் மெல்லியல் செல்வாள்,

நாளும் வேலை நண்ணிடும் ஆகில்
ஆளும் கோளின் அமைப்பே என்க.

இந்த நிலையில் ஏழைக் குடும்பம்,
சிந்தை கொளலேன், சிரிப்பும் கொளலேன்!

கூலி வரினும் குதூகலம் இல்லை,
காலி யாகினும் கடுந்துயர் இல்லை,

தாயும் தந்தையும் தளர்ச்சி யுற்ருல்,
சேயும் அக்கதி சேர்ந்து சிதறும்,

அந்தோ, இந்த அலமறல் ஏனே,
எந்தாய், இந்த இழிவும் ஏனே?

5. குழவிப் பருவம்

பிணியிலி வாழ்க்கை
கணிகனும் அறியான்.

செல்வச் செழிப்பினில் சீதை பிறந்துறின்
கல்வியர் கேள்வியர் கணத்தினில் உதித்திடின்

சமய அன்பர் சார்பினில் தோன்றிடின்
இமயம் எனவே இருந்திடும் போடணை.

ஆணாய்த் தோன்றினும் அதுவே குறையுறும்
பேணாப் பெண்ணாய்ப் பிறந்தனள் அந்தோ?

கண்ணன் பிறந்த கலிவட நகரில்
அண்ணலுக் கசோதை ஆற்றின தறிவீர்.

பெரியாழ் வாரதைப் பெரிதும் புகழ்ந்தே
விரிவார் கவியால் விளித்துச் சென்றனர்

அதனில் சிறுகூ குறையினும் சீதைக்
கிதமெனச் சொல்வார் எவரும் இலையே.

செங்கயல் உகளும் செழுந்தடக் கூடலில்
அங்கயற் கண்ணி அம்மையோ உதித்திட

அம்மைக் கரசியார் ஆற்றிய ஆதர
விம்மையில் சீதைக் கெண்ணிடல் ஆமோ!

காப்புக் கட்டிக் கடவுளை வாழ்த்திச்
சீப்பில் சீவிச் செங்கீ ரைஆட்டித்

தொட்டிலில் கிடத்தித் தொடர்ந்துதா லாட்டி
எட்டி நிறுத்திச் சப்பாணி தட்டி

முத்தம் இட்டு முன்வரு கௌச்சொலி
நித்தம் அம்புலி நேர்த்தியில் அழைத்திடக்

கழங்கு எறிகையில் கவிபல கூறி
வழங்குமம் மானை வளமதில் ஆடிட

ஊசல் மஞ்சம் உவப்புடன் ஆட்டி
ஏசல் உறுதே ஏந்திழை செய்தாள்.

அவ்வகைப் பத்தாம் அழகிய பருவம்
செவ்வகை முறையில் செய்தனர் என்று

குமர குருபரர் கூறிய வாறு
நமது சீதைபால் நவிலுவர் எவரே?

அந்தோ, சீதைக் காற்றின சீரோ
சிந்தா குலத்தில் செலுத்தும் அழுகையே.

தன்னந் தனியே தரைதனில் கிடக்கச்
சின்னஞ் சிறுபுழு சீறிக் கடித்திடும்.

துள்ளி விழுமதில் துடைபடும் அதனால்
தள்ளிப் போகும் தணியும் அழுகையும்.

மேனி முற்றும் மெலிந்து வாட
ஆனி அடையும், அதுதான் போடணே.

ஊரில் அம்மை ஓட்டி வரவே
சேரியின் பாங்கர் செழித்துப் படரும்.

சீதையும் அம்மைச் சீற்றத் திடையே
வாதையும் பட்டு வடுக்குறி கொண்டாள்.

தெய்வச் செயலால் தெருக்குழ வியர்போல்
கைவைத் திலதே கண்ணில் பொட்டை.

மலைச்சுரம் தொத்த மலைந்தனள் அதன்பால்
முறைச்சுரம் வரவும் மோந்தாள் அதன்வலி,

ஆயினும் வல்வினை அவளைத் தொடவிலை
சேயினம் தனிலது சிறப்பும் அன்றோ !

6. குடும்பப் பெருக்கு — குடும்பப் பெருக்கோ இடும்பை தருமே.

விலங்கினில் பறவையில் வேறுபல் லுயிர்களில்
இலங்கிடும் கொல்லோ ஏழ்மையும் செல்வமும்?

வறுமையும் செம்மையும் மானுடன் மட்டும்
பெறுதலும் ஏனோ, பெறவிழைந் தனனோ?

சாதலும் நோதலும் சாருதல் அன்றி
ஆதலும் வறியது அஃறிணைக் குண்டோ?

வறுமைக் கவலே வாய்த்தலும் மாந்தன்
சிறுமை கொணற்கோ செறிந்ததும் அறிவும்?

எத்தனை உழைத்தும் எத்தனை வருந்தியும்
அத்தனைக் காறுதல் அடைதலும் இலனே.

ஏழ்மையில் பிறந்தான் இடையிலா வறுமை
தாழ்மையில் நிறுத்திடும் தனித்தவன் உரிமையோ!

சிந்தனை இன்றிச் செழிப்பினைப் பெறலும்
இந்நல் ஏழைகட் கிலதும் ஏனோ?

விலங்கோ கவலே வேறொன் றின்றிக்
குலங்கள் பெருக்கிக் குலாவிக் கூடும்.

ஏழை மனிதன் இன்பம் துய்ப்பதில்
மாழைக் கண்ணீர் மலிந்து தடைசெயும்.

விலங்கைப் போன்று விடுதலே பெறினே
குலங்கள் பெருக்க குலாவலாம் மனிதன்.

ஆனால் அத்தகை அமைதி அடைதலில்
தானாய்க் கட்டைத் தாங்குவன் கொல்லோ?

பகலெலாம் உழைப்பான் படுவான் வருத்தம்
இகலிலா இரவில் இன்பம் கருதுவான்.

ஊனின் குறும்பை உலகெலாம் அறியும்;
தேனின் சுவையதில் சிறிதும் இன்றியும்,

மாந்தனை வலையில் மயக்கிப் பிடித்தே
ஈந்திடும் வருத்தம் ஏழையற் கென்றும்.

குடும்பப் பெருக்கம் கூடின் வருத்தம்
இடும்பை வலுக்கும் என்பதும் அறிவான்.

அறிந்தும் பயனிலை அவலத் திடையில்
முறிந்து விழுவான் முடம்செயும் இன்பில்.

ஊனின் குறும்பை உதறி விடாமல்
மேனிக் கதனை மேவுவன் ஏழையே.

சீதையின் பெற்றோர் சிந்தையொன் றின்றி
வாதையை எண்ணார் வலையில் பட்டார்.

குழவியும் தோன்றிக் குதலை மொழிமுனம்
மழவிடை போன்று மற்றொன் றீன்றார்.

பெண்ணாய் ஆகவும் பெற்றோர் எண்ணம்
மண்ணாய்ப் போகும்; மதியினி என்னே!

அதிலோ ஆறுதல் அடையார் ஆகி
மதியோ கெட்டு மற்றொன் றீன்றார்.

ஆனால் அதுவோ ஆறாய் ஆக
வானோர்க் காசி வகுத்தே நின்றார்.

அவ்வகை மூன்றரை ஆண்டில், மூன்று
கவ்விய வறுமையில் கண்டனர் குழவியர்.

ஒன்றினைப் புரக்கும் உறுதியும் இல்லார்
கன்றுகள் மூன்றைக் காப்பது மெவ்வண்?

இந்தக் கவலை ஏக்கமும் தந்திடச்
சிந்தை கலங்கிச் சினந்தனர் எதையுமே.

7. பெருக்கில் குறுக்கு

பட்டகாலிலே படும்
கெட்டகுடியே கெடும்.

குடும்பம் பெருகிடக் கூழுக் கடிதடி
இடும்பை மேன்மேல் ஏற்றிச் செல்லும்.

தந்தையும் தாயும் தனித்தனி வேலையில்
சிந்தை கலங்கிடச் சேர்ந்தனர் பிழைக்க.

இடையரு வேலை எங்குதான் கிடைக்கும்
தடையரு ஊதியம் தழைத்திடும் கொல்லோ?

பெற்ற தகப்பன் பெரிதும் உழைத்தான்,
உற்ற காசும் உதவப் போதா.

தாயோ, பாவம், சேயோர் அழுக
நாயோ எனவே ஓயா துழைப்பாள்.

உழைத்தும் உழைத்தும் உடல்மெலி வுற்ருள்
பிழைத்தல் எதற்கெனப் பேதையள் வருந்தும்.

இந்த நிலைமையில் ஏழைச் சேய்கள்
எந்தச் செழிப்பை ஏற்பார் கொல்லோ!

போதாக் குறைக்குப் புதிதாய்ச் சேரியில்
கோதார் நோய்கள் கூடி வந்தன.

ஓட்டுவா ரொட்டும் தொத்துவார் தொத்தும்
மட்டிலா துற்று மலைவைத் தந்தன.

பகலெலாம் வெளியே பறத்தலால் பெற்ருேர்
இகலுரு திருந்தார், இழிநோய் தவிர்ந்தார்.

ஆனால் அவ்வணம் அடிக்கடி வாய்க்குமோ
ஓநாய் போல ஒருமுறை வாந்திநோய்

சேரியில் வந்தது சீறி வதைத்தது;
ஏரியில் கிணற்றில் ஏதோ கிருமிகள்

துன்று நின்று தொடர்ந்தே கெடுக்க
உன்று தருந்தினர் ஊரார்; உடனே

வாந்தி நோயும் வளமுற யமன்பால்
ஏந்திச் சென்றது ஏறிய தொகையில்.

சேரியில் புகுந்த சிறுதே வதையோ
வாரிக் கொண்டது; வகையறி யாதே

கோரிப் பூசை கொடுத்தனர் தேவிபால்
நாரிகள் நரர்கள் நமனூர் சென்றபின்.

இந்தப் பம்பல் இடையில் ஐயோ,
தந்தை உயிர்க்குத் தாபம் விளைத்தது.

அந்தோ தகப்பன் ஆருயிர் போகக்
கந்தை கொளுத்திக் காட்டில் புதைத்தனர்.

பட்ட காலிலே படுமாம், மற்றும்
கெட்ட குடியே கெடுமாம், இந்தத்

துட்டப் பழமொழி தொடர்ந்துச் சேரியில்
எட்டிப் பிடிங்கிடும் எமனோர் சேயை

மீந்த இரண்டு மெல்லியல் சேய்களை
ஏந்திய கையில் இகத்தில் திரிந்தாள்.

அடுத்த வீட்டார் ஆற்றும் உதவி
கொடுத்து வைக்காள் கொஞ்சமும் தாயோ.

வருந்தி உழைத்தும் வளமை இன்றி
அருந்தித் தந்தாள் அரைவயிற் றுணவே.

இந்த முறையில் ஏழைத் தாயாள்
சிந்தை கலங்கிச் சிலநாள் கழித்தாள்.



8. வேலை அமைவு

பிழைத்திட வேண்டின்
உழைத்திடல் கெதியாம்,

புதல்வனைக் குழியில் புதைத்தசின் ஞளில்
புதல்வியர் நோக்கி புலம்புவள் தாயாள்.—

'சீதாய், தம்பியும் செத்தனன், அந்தோ,
யாதே இயம்புவன் யானும் இனிதான்?

வேதா என்தலை விதித்ததும் அறியேன்
தீதோ நன்ருே தெரிதலும் வேண்டேன்.

எங்கை இனிமேல் யாதும் செய்யா
தங்கை உள்ளாள், தாங்கிநீ நிற்பாய்.

இன்றே இறக்க யானும் விழைவேன்'
என்றே கூறினள். ஏழைச் சீதை

எட்டு வயதினள் இதன்பொருள் அறிந்தாள்.
கொட்டும் கண்ணீர் துடைத்துச் சொல்வாள்.—

'அம்மா நீயும், அகன்ருல் யாமோ
சும்மா இருக்கேம், சுடுகா டதனில்

எங்களைப் புதைத்துவிட் டேகுவை' என்ருள்.
'உங்களைப் புதைத்திட ஓர்க்கா தென்மனம்,

ஐயோ, பாவம், அருமைச் சேய்காள்,
வெய்யோன் கொல்லினும் வேண்டேன் கொலையே,

உங்களுக் காகஎன் உயிர்தரித் திடுவேன்'
அங்கண் சொல்லி அமைதியைத் தந்தாள்.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண். 1530
அவ்வை தி.க. சண்முகம் ... பல்கலைக்...

உடலில் ஆற்றலும் உறுதியும் இல்லாள்
திடமாய் வேலை செய்யவும் முடியாள்,

எவ்வணம் உணவை ஈருயிர்க் கீவாள்?
செவ்வணம் வருவாய் தேடவும் நினைத்தாள்.

குற்றுயிர் விட்டும் கூலி இயற்றிப்
பெற்றவள் தம்மைப் பேணுதல் கண்ட

சீதையோ கவலையில் செறிந்து, தாயின்
வாதை விடுக்க வகைகண் டறிந்தாள்.

'அம்மா ஒருத்திநீ அவலப் படுதல்
சும்மா கண்டும் சூழேன் இனிநான்.

எனைப்போல் வயதில் எட்டும் ஆனோர்
பனைப்போல் கூலிப் பணமும் பெறுவதை

இந்தச் சேரியில் இருப்பது காண்பேன்.
குந்தி இருக்கேன் கூலிக்குச் செல்வேன்'

என்ற சீதையின் எழுச்சி கண்டாள்
நின்று கிளம்பும் நெறிஅறி வோர்ந்தாள்.

மறுதினம் சீதையை மருங்கில் கொண்டே
உறுதியில் செல்வாள் ஒருசெழு மனைப்பால்.

தோலும் எலும்புமே தோன்றும் உடலினர்
மேலும் வந்து மெல்ல நிற்பதைச்

செல்வன் கண்டு சீறி விழுந்தான்
பல்விதம் ஆகப் பகர்ந்தான் தீச்சொல்.

'ஏனடி, வேலை இலையோ, போப்போ,
மானமும் இன்றி மட்டும் இன்றிப்

பிச்சை கேட்க பிள்ளை யோடே
நச்ச வந்தாய், நாணம் இலையோ?'

என்று கனன்றான் எரிந்து விழுந்தான்.
நின்று கூறுவாள் 'நீங்களோ செல்வர்,

நாங்களும் பிச்சை நாடி வரவிலை,
தாங்கள் வேலை தந்தால் போதும்

இந்தப் பெண்ணும் இசைந்து செய்வாள்'
அந்தப் பேச்சை அனைத்தும் கேட்கான்

'போப்போ' என்றே பொங்கி அறைந்துத்
தாழ்ப்பாள் இட்டுத் தணந்தான் கஞ்சன்.

இவ்வா றுலகின் இழிவை முதன்முதல்
ஒவ்வா முறையில் உணர்ந்தாள் சீதையும்.

'ஆனால் என்ன, ஆருயிர் வளர்த்தவே
போனாற் போகுது, புதுமனை செல்வோம்'

என்று தாயாள் இரண்டொரு வீடு
சென்று தேடிச் சேர்த்தினாள் சீதையை.

இரண்டு வெள்ளி ஈட்டும் வேலையே
திரண்ட பணியாய்த் தேடி அமர்த்தினாள்.

பல்லைக் கடித்தும் பலன்முன் னிட்டும்
இல்லின் வேலையில் ஏழை அமர்ந்தாள்.

9. இழவு ஒன்று

*பிறந்தார் மறைய*
*இருந்தார் என்செய.*

வேலை சொல்லின் விரும்பிச் செய்வாள்
ஆலை முறையில் அனைத்தும் செய்வாள்.

காலை முதலே கடமை முற்றும்
மாலை வரையில் மகிழ்ந்து செய்வாள்.

பேச்சொன் றேற்கப் பிணங்கி நிற்பாள்
தீச்சொல் கேட்கத் திணறி நிற்பாள்,

எட்டு வயதாள் ஏழைச் சீதை
திட்டுப் படவோ திடுக்கிட் டெரிவாள்.

ஆயினு மென்ன, அடக்கம் கொண்டு
சேயினும் பொறுத்துச் செய்வாள் கடமை.

தங்கை உள்ளாள் தாயும் உண்டு
பொங்கி விலகின் போமே ஊதியம்.

பல்லைக் கடித்துப் பழியதை நினையாள்
சொல்லைக் கேட்டும் சும்மா இருப்பாள்.

உலக இயல்பின் உளவை அறிந்துக்
கலகம் தவிர்ப்பாள் கழித்தாள் காலம்.

சேர்ந்த இல்லம் செழிப்பை உறினும்
ஆர்ந்த தலைவன் அன்புளன் எனினும்

வீட்டுத் தலைவி வெறியள் போல
நீட்டும் கோபம் நிரம்பக் கொள்வாள்.

காரணம் இன்றிக் கடிந்து பேசிச்
சூரணக் கசப்பில் கொட்டுவள் திட்டே.

ஆனால் சீதை அடங்கியே நடப்பாள்
ஓநாய் வாயில் உற்றதோர் ஆடுபோல்.

சந்திர மதியாள் அந்தணன் வீட்டில்
இந்திரன் மதலை மகேந்திரச் சிறையில்

அடிமையர் ஆகி ஆற்றிய தொழும்பின்
கொடுமையை விரித்தனர் குலக்கவி மார்கள்.

சீதையோ பட்ட சின்னு பின்னமும்
காதையாய் உரைக்கக் கவிஞரும் உளரோ?

சந்திர மதியோ இந்திரன் மதலையோ
தந்திர மறியா தையல்நம் சீதையோ

யாரோ மிகுந்த இடும்பைப் பட்டார்,
யாரே கூற இயங்குவார் உண்டோ?

பேதைப் பெண்ணே பிறந்த குடிக்காய்
வாதைப் பட்டு வளமெலாம் இழந்தாள்.

வீட்டுள் தங்கை வெறுமனே கிடப்பாள்
ஊட்டி வைக்க ஒருவரும் இல்லை

காலையில் சென்றால் மாலை மட்டும்
வேலையில் குனிவாள் வேறொன் றறியாள்.

இரவில் சலித்தே இழிகுடில் அடையின்
தரையில் தூங்கும் தங்கையைக் காண்பாள்.

தங்கைக் குணவைத் தாளே ஊட்ட
எங்கண் முடியும் இலதால் ஓய்வும்?

இந்த முறையில் இளம்பெண் சீதை
நிந்தை கூடிய நிலேயில் இருக்க

ஆயாள் தானும் அக்கறை கொண்டும்
சேயோ டிருக்கச் சிறுபொழு தடையாள்.

மண்ணில் உளேந்து மண்ணும் பூசி
உண்ணும் கூழும் உருத சிசுவோ

எண்ணெய் குளிப்போ எதையும் காணுள்
நண்ணும் நோயும் நாடா தாமோ!

குழவிப் பிணியோ கொடிதாய் வரவே
அழலில் பட்ட புழுப்போல் தாயும்,

ஒருநாள் கழித்துமற் ருெருநாள் சென்றே
இருநாள் வேலே இயற்றுவாள் அன்றே.

தன்னுடல் தேய்தல் தானும் கண்டாள்,
உன்னிடல் உண்டோ உதவியைச் சேய்க்கே!

மருந்து கொடுத்திட மருத்துவர் இல்லே
இருந்தொகை அளிக்க ஏழைக் கேது?

சேரிப் பாங்கர் செல்லார் அரசினில்
வாரி உண்ணும் வளமுடை மருத்துவர்,

என்ன செய்வாள் ஏழைத் தாயாள்
தன்னந் தனியே தனித்தே அழுவாள்.

பின்னர் கூழைப் பெறவே தொழும்பில்
சின்னப் படவே செல்வாள். ஒருநாள்

குடிசை திரும்பக் குழவி சவமாய்
அடியில் கிடக்க அலமோதி யழுதாள்.

சீதை வந்தாள் சிறுபெண் ணயினும்
ஓதை கேட்டாள் உணர்ந்தாள் முற்றும்.

சேயை வாரிச் சிறுமுத் திட்டாள்
வாயை விட்டு வழிய அழுதாள்.

10. தாயும் தணந்தாள் — சேய்கள் துயரைத் தாயாள் நரியாள்.

தேம்பித் தேம்பித் திருவிலாள் அழுதாள்
ஓம்பி அணைந்தாள் உயிரிலாச் சிசுவை,

இரவெலாம் அழுதாள் எடுப்பாள் புலம்புவாள்
கரவிலா மதிமகள் கவியதும் தோற்கவே :—

"என்றன் மகளே ஏனுனைப் பெற்றேன்,
இன்றுநீ மறையவோ யானிலாப் பொழுதே,
நன்றுனைப் புரக்கிலேன் நானுவன் யானும்
சென்றுநீ ஒளிந்தாய் சீச்சீ என்றோ?

கொலையெதும் செய்யேன் குணமதும் குன்றேன்
நிலையதை அறியேன் நீளுல கறியேன்
தலைவனை இழந்தேன் தனயனைக் கொடுத்தேன்
முலையது நன்கு மூட்டிலேன், இறந்தாய்.

மூவரும் மறைந்தார் மூத்ததொன் றுண்டினி
சாவதொன் றுளது, சகிப்பேன் அவட்காய்,
ஆவன செய்ய அருவினை செய்திலேன்
போவதும் காண்கிறேன், பொல்லா நாயினேன்.

இறைவனும் எனக்குனை ஏனோ தந்தான்?
நிறைவய துடனே நினைத்தந் திலனே.
அறைகுவ தறியேன் அனைத்தையும் விடுவேன்
உறையுளும் உடையும் உணவிலேன் யானே

மதலாய் மதலாய் மன்னிப் பீவையோ?
குதலைகள் மொழிமுனம் கூற்றுறச் செய்தேன்,
முதலைவாய்ப் பிள்ளையை முனம்தந் தவர்போல்
இதமுறும் பெரியார் எனக்குறு வாரோ?"

இன்னணம் பற்பல இயம்பி அழுதாள்
பொன்னெனும் சேய்பால் புலம்பி அழுதாள்.

அழுகையில் செவிசாய்த் தாந்தை மட்டுமோ
கழுதுமே அலறிடும் கசிந்தங் கலாய்த்தே.

ஏழைத் தாய்பால் எப்பெண் பிறவியும்
மாழைக் கண்ணீர் மலிந்திட வரவிலை.

வாய்விட் டழுகையில் வருந்தி அழைத்த
சேய்விடுத் தருளிய சுந்தரர் தோன்றிலர்.

அன்றிர வெல்லாம் அழுகையில் தாயிடம்
சென்றவட் காறுதல் செப்பினர் இலரே.

மேனுள் இவள்போல் மெல்லியள் ஒருத்தி
பாறு றியவாய்ப் பாலரைக் கணவனை

கூற்றுவன் கைக்குக் கொடுத்த ஞான்று
ஆற்றலா முறையில் அழுது வெறியளாய்

அம்மூ வரையும் அழைத்துத் தருகெனச்
செம்மான் புனிதனைச் சேவித் திடவே

பிடிகடு கதனைப் பெற்று வந்தே
இடுகெனக் கூறி ஏழை மகளுக்

குலகியல் நெறியினை உபதேசித்த
அலகிலா அருளுடை அமலன், போதி

நீழற் பெம்மான், நிலைதவிர்ந் தழுதிடும்
மாதைக் கண்ணியள் மருங்குவந் திலரே.

சீதை ஒருத்தியே சிறிதள வழுது
வாதைப் பட்டு வாடி உறங்கினள்.

கதிரவன் உதித்திடக் கதறினள் தாயாள்
எதிரிகள் என்ன இருபுறத் தாரும்

முறையென வந்து முதுமொழி பேசிப்
பறையினைக் கொட்டிப் பகலிலே குழிதனில்

அருமைக் குழவியை ஆழப் புதைத்தனர்.
ஒருமை நெஞ்சினள் உள்ளே தன்னையும்

சேரப் புதையெனத் தேம்பி அழுதாள்.
ஊரார் அதனை உதறித் தள்ளிடக்

குடிசையில் படுத்தாள் குளறிக் கிடந்தாள்.
அடிசிலோ கூழோ அருந்தா திருந்தாள்.

உடலில் பலமிலள் உணர்வும் குன்றினள்;
குடலில் நோயும் கொள்ளத் தொடர்ந்தது.

சீதையோ விடுதியைச் சிலநாள் பெற்றுப்
பேதைத் தாயைப் பேணி நின்றாள்.

படுத்த படுக்கையில் பெற்றவள் கிடக்க
எடுத்த தொழிலை ஏற்பது முறையெனக்

சீதை சென்றுள். சிற்று தியத்தால்
வாதை யுற்றும் வளர்த்தினள் ஈருயிர்.

சொல்லொணுக் கடுமையில் சூழ்நிலை இருந்தும்
பல்லெலாம் கடித்துப் பாங்குற நடத்திளுள்.

இருந்தும் பயனென், ஏழைத் தாயுயிர்
பருந்தெனப் பறந்தது; படுதுயர் சகிக்காள்.

சீதையோ தன்னந் தனியள் ஆனுள்,
தீதையோ அறியாள் திருவிலாள் உலகினில்.

11. தனியள் வாழ்க்கை — தன்னந் தனியெனில் நன்னது மாகும்.

தன்னந் தனியள் தானே ஆனுள்,
உன்னற் கரிய உரிமையோ அஃதும்!

பத்து வயதுப் பச்சிளம் பெண்கள்
எத்திக் குறினும் இவள்நிலை உளரோ?

கோடிக் கணக்கில் குடிபுடை சூழ்ந்தும்
நாடிப் பழக நாரியர் இலரே.

உற்றார் உறவோர் ஒருவரும் படைக்காள்
பற்றுங் கில்லாப் பழையளும் அலளே.

பாலை வனத்தில் பாதை பிசகி
மாலை ஆகியும் மலைவுறும் தனியள்போல்,

பனிவரைச் சார்பில் பழக்கம் இல்லாள்
தனிநிலை அடைந்துத் தவழ்தல் போலும்,

பெருங்கடல் நடுவில் பேர்க்கொரு கட்டையில்
மருங்கெவர் இல்லாள் மாலுறல் போலும்,

இமம்பெய் துருவத் திடையுறு வெளியில்
சுமைகொடு செல்தனிச் சொல்லிலள் போலும்,

சிதைச் சிறுபெண் சீருரு உலகின்
ஓதைப் பெருக்கிடை உற்றுள் தனிமையே.

இரக்கம் உறற்கும் இறங்கா நிலையில்
புரக்க வாரா புன்மையே கண்டாள்.

"இனிமை ஏகாந்தம்" என்றாள் ஔவை
தனிமை அதன்சீர் தந்தது கொல்லோ?

புவியில் வாழ்ந்து புன்மை உணர்ந்தபின்
கவிகள் தனிமை காட்டி மகிழ்வர்.

சின்னஞ் சிறுபெண் செழிக்கும் வாழ்வை
முன்னம் அறியாள் முரணும் கொள்ளாள்.

தன்னந் தனியே தனிமையில் இருத்தல்
என்ன நிலையோ எவரே அறிந்தார்!

இன்ன நிலையில் இளம்பெண் சீதை
முன்னம் இருந்த முதலாள் தொழும்பில்

நண்ணி வேலை நாடிச் சேர்ந்தாள்;
உண்ணிடப் போதா ஊதியம் பெற்றாள்.

மக்களின் அனுபவம் மலிந்து வரவர
தக்கவே றிடங்களில் தன்தொழில் கண்டாள்.

அச்சம் குறைய அவலம் மறைய
துச்சம்என் றெண்ணுவள் தொடரும் மிரட்டலை;

மானங் காத்தும் மனதைத் தேற்றியும்
ஆன இடங்களில் அமர்ந்தாள் தொழிற்கே.

இந்த வகையில் இனிதுறும் வாழ்வில்
சிந்தை கலங்காள் செலுத்தினள் வாழ்க்கை.

12. நாட்பணி நிற்றல் — அன்பினில் அடைகூழ் அமுதினும் இனிதே.

நடுத்தர வாழ்க்கை நடத்துமோர் குடும்பம்
கொடுத்தது வேலை கூழோ ருதியம்.

சீதையும் அங்கே செழிப்புடன் வளர்ந்தாள்,
வாதையும் இன்றிய வளமும் பெற்ருள்.

அனுதைப் பெண்ணென அறிந்தது குடும்பம்,
தனுதியில் குறைந்தது தயவினில் மிகுந்தது.

இந்த வாழ்வே எந்த வாழ்வினும்
சிந்தை யற்ற சிறப்பின தறிந்தாள்.

நற்குண முடைய நாரியும் நாதனும்
இற்குடி இருப்பின் எவையும் நன்றே.

அத்தனை நலத்தில் அனுதைச் சிறுமி
சித்தனின் அருளால் திகழ்ந்து நின்ருள்.

காலை தொடங்கிக் கடமை செய்வதில்
மாலை மட்டும் மகிழ்ந்தே செய்வாள்.

விடியலின் முன்னர் விரைவில் எழுந்துபோய்க்
கொடிபடர் வாயிலைக் கூட்டிநீர் தெளிப்பாள்,

புற்று மண்ணில் பூதிச் சாம்பரில்
பற்று தேய்த்துப் பளபளப் பாக்குவள்,

வீட்டைப் பெருக்கி வெளியில் போக்கி
மாட்டுத் தொழுவம் மலம்நீக் கிடுவாள்,

வாவியில் நீரை வகையாய்ச் சேந்தி
தாவியும் இறைத்தும் தாழியில் கொட்டுவள்,

ஆட்டல் குத்தல் அறைத்தல் இவைகளால்
வீட்டுச் சமயலில் வேண்டிய உதவுவள்,

குழவிகள் நன்கு குளிக்க வைத்துப்
பழமைய துணிகள் பாங்காய்த் துவைப்பாள்,

பிற்பகல் தலைவி பேணும் பணியும்
முற்பகல் போன்றே முடித்துத் தருவாள்,

மாலையில் மீண்டும் வாயில் தெளித்துக்
கோலமும் இட்டுக் குதூகலம் செய்வாள்,

இந்த முறையில் இல்லப் பணிகள்
சொந்தப் பணிபோல் சுகமாய் இயற்றுவாள்.

தலைவியும் தலைவனும் தனித்தே மகிழ்ந்தும்
உலையினில் பெய்த உணவதும் சின்னாள்

உண்ணத் தருவர், உவந்த நாளில்
வண்ணச் சேலையும் வழங்கி நிற்பர்.

அடிமைத் தொழிலதும் அன்போ டமையின்
படியும் ஆட்குப் பாங்காம் அன்றோ ?

தொழிற்கண் மேன்மை தோன்றும் இந்நாள்
இழிவும் அதிலிலை, ஏழையும் அறிந்தாள்.

*

**13. பூப்புப் பருவம்** — *மலர்க்கண் புதுமை மாறலும் பொதுமை.*

பருவம் அடைந்திடப் பலவும் மலரும்
உருவம் பருத்திட உவந்து மணக்கும்.

செடிகள் மரங்கள் சிறுபுல் பயிர்கள்
கொடிகள் மலர்ந்து குதூகலம் காட்டும்.

பூவா மரங்கள் புவியில் உளவென
நாவால் இசைத்தார் நனிஅறி யாரே.

ஆலும் பலாவும் அத்தியும் முதலிய
சூலும் அடையின் சுட்டிப் பார்மின்.

பழமெனத் தோன்றும் பசுங்கனிக் குள்ளே
தழதழ வென்னத் தழைத்திடும் பூவே.

புள்ளும் விலங்கும் புவியூர் வனவும்
துள்ளும் வயதில் தொடரும் மணமும்.

மாந்தரும் அவைபோல் மணமுறும் பருவம்
ஏந்துவர் உணர்வும் இன்புடன் கொண்டே

இந்தப் பருவம் ஏந்திழை மாரில்
உந்தித் தோன்றும் உவாவெனத் திகழ்ந்தே.

ஆண்டு பன்னிரண் டாகில் சிலர்பால்
தீண்டல் தோன்றித் திகழ்ந்திடு மாமே.

இன்னும் இரண்டாண் டெய்திச் சென்றால்
மன்னும் பூப்பு மலிந்திடும் எங்கும்.

காதல் என்ற கடிநிலே தோன்றி
மாதர்க் கணியாய் மலிந்தே படரும்.

காமன் அந்நாள் கடிதில் தோன்றி
ஏமம் இலாரை எதிர்த்துப் பிடிப்பான்.

இந்த நிலைமை எளிதில் உணர்ந்த
எந்தை நாட்டினர் இளம்மணம் செய்தனர்.

சிந்தை இன்றிச் சீருறும் பருவம்
விந்தை படைக்க வேட்டம் செய்தனர்.

மேனாட் டார்கள் மிதமாய்ப் பருவம்
தானாய் வளரத் தளர்ந்து நிற்பார்.

காதல் மணமே கவினெனக் கொண்டு
பேதம் இன்றிப் பெரிதும் விழைந்தார்.

இந்நாட் டளவில் இறந்த நாளில்
அந்நாள் மக்கள் அணைந்தார் களவியல்.

ஆனால் இன்றோ அருமைப் பெற்றோர்
ஈனு நிற்பர் எழிற்சடங் கதற்குள்.

சீதைச் சிறுமி செழித்தாள் பருவம்
ஓதை இன்றி ஒளிபெற் றுயர்ந்தாள்.

மதியும் மணமும் மகிழ்வில் சிறக்க
விதியும் பொங்க வீறதில் திகழ்ந்தாள்.

*

**14.** **காதலில் கடிமணம்**

*களவுறும் காதலில்*
*கடிமணம் கூடிடும்.*

அடுத்தொரு சேரியில் ஆண்டகை ஒருவன்
தொடுத்தனன் மதனன் துணர்களை அவள்பால்

காதல் ததும்பிய கண்கள் அவள்தன்
பாதம் அடைந்தே பணிந்து வணங்கின.

நெஞ்சில் எழுந்த நினைவுகள் வடிவுறக்
கொஞ்சி அவளுரம் குடிகொளத் தொடங்கின.

கால்களோ அவள் செலும் கவின்வழி சென்று
நூல்களால் வலைபின நுழைந்திடும் சிறைகொள.

உதயமும் அத்தமும் உறுதொழில் மனைபால்
இதயமும் மகிழ்வுற இணையவள் செல்கையில்

இளவலும் தன்தொழில் எண்ணி எதிர்ப்புறம்
களவிலா தேகுவன், காணவும் மகிழுவன்.

பன்முறை கண்டிடும் பான்மை ஏற்படச்
சொன்முறை இலதும் சூழ்ந்திடும் மனநிலை.

மருதனும் சீதையை மதித்துப் பேசிட
இருதயம் பொங்குவன், இனமுறைக் கஞ்சுவன்.

சீதையோ முதலில் சிறிதும் கவனியாள்
பாதையில் அடிக்கடி பார்க்கவும் அழுந்துவாள்.

நாணம் உற்று நழுவிச் செல்லுவாள்
பாணம் பின்புறம் படஅதில் பதைப்பாள்.

நெஞ்சு கலங்கிட நினைவு மழுங்கிடப்
பிஞ்சுக் கைப்பை பிசகிற் ருெருநாள்,

அதுவிழக் கண்ட ஆண்டகை எடுத்து
நுதலினள் முகத்தை நோக்கித் தந்தனன்.

'தவறி விழுந்ததோ தளத்தில்' என்று
நுவலினன் கண்களில் நுழைந்திடும் காதலில்.

வணக்கம் சொல்லி வாங்கிக் கொண்டாள்,
சுணக்கம் செய்யாள், சுழல்பட் டேகிஞள்.

பின்னர் மறுநாள் பேசிட முயன்றனன்
நன்னர் முகத்தில் நவின்றதும் ஒருசொல்.

இன்ன முறையில் இருவருள் பந்தம்
உன்ன லாகா உறுதியில் வளர்ந்தது.

எற்ற உருவினர் இயைந்த பண்பினர்,
தோற்றம் பிடித்தது, தொடர்ந்தது காதலும்.

இருவரும் தொழிலில் இணங்கி இருந்தவர்
ஒருவரும் இதனை உதறித் தள்ளார்.

உறவு கொண்டாடி ஊரினர் மதிக்கத்
திறமுடன் நன்மணம் தேர்ந்தனர் ஒருநாள்.

காதலர் இருவரும் கடிமணம் பூண்டுத்
தீதறும் வாழ்க்கையில் திகழ்ந்தனர் அதுமுதல்.

*

15. **இல்லற மகிழ்வு**

*இல்லற முள்ளதில்
நல்லறமாமே.*

மருதனும் சீதையும் மணம்முடித் திட்டபின்
கருதலா இல்லறக் கவினெலாம் பருகினர்.

இளவலர் இருவரும் இரட்டைப் பகடுகள்
அளவிலா ஏருழும் அருமையில் வாழ்ந்தனர்.

ஒத்த மனமுடன் உவப்பிடும் இன்பினை
சித்தம் அருந்திடச் சேர்ந்து வாழ்ந்தனர்.

குடிசை எனினும் கூடிய மட்டில்
கொடிபடர் மாளிகைக் கொள்கையில் இருந்தனர்.

கூழினைப் பருகினும் குடிப்பதோ அமுதென
வாழ்வினில் இன்பம் வளர்த்தினர் நன்கே.

இருவரும் தொழில்செய் திருபங் கூதியம்
திருவருள் பெருகிடத் தேர்ந்தனர் வாழ்க்கையில்.

அவனோ ஊதியம் ஆலையில் உற்றனன்
அவளோ ஒருவீட் டலுவலில் ஈட்டினள்

இருவரும் தொடங்கிய இல்லற வாழ்க்கை
பெருகிடும் வனப்பில் பிழையிலா தமைந்திடும்.

பகலெலாம் தொழிலில் பாடுபட் டுழைத்தே
இகலிலா இரவில் இன்பமும் விழைந்தனர்.

விடியல் முன்னர் விரைவினில் எழுந்து
கொடியனாள் சமைத்துக் கூழினைத் தருவாள்.

இருவரும் அருந்தி எஞ்சிய தேந்தித்
தெருவழித் தொழில்செயச் செல்லுவர் காலையில்.

மாலையில் குடிசையின் மாட்டு வந்ததும்
மூலையில் அடுப்பை மூட்டிச் சமைப்பாள்.

துணைவனுக் கூட்டித் தொடர்ந்துதா னுண்டு
துணையவள் பின்னர் தூக்கம் கொள்ளுவாள்.

இந்த முறையில் இல்லறம் நன்கு
சிந்தை யின்றிச் செழித்தது என்க.

கவலை இலதாய்க் கவின்குடி இலங்க
அவலம் இலராய் அறந்தனைத் தேர்ந்தனர்.

சிக்கன முறையில் சீரிய அளவில்
மக்கள் இருவரும் மதிப்புற வாழ்ந்தனர்.

பணமும் மிச்சம் படைத்துக் குடிசையை
குணமும் இலங்கக் கூட்டி அமைத்தனர்.

சீதையும் மருதனும் சிறப்பே எண்ணி
ஓதையும் இன்றி உயர்குடி நிறுவினர்.

ஆண்டுகள் இரண்டும் அமைதியில் செல்ல
நீண்டிய உடல்நலம் நிறைந்திட நின்றனர்

குழவிப் பருவம் கொடுத்த துயரம்
நிழலென மறையும், நினைந்திலள் சீதையும்.

*

16. குழவியின் தோற்றம் — குழவியும் தோன்றின் குதூகலம் இயல்பே.

உம்பர் உலகில் உவப்பே உண்டாம்,
வம்பில் நிரயம் வழங்கும் துன்பே;

இம்பர் உலகில் இரண்டும் விரவும்,
என்பர் அறிவின் இயல்லை அறிந்தோர்.

எக்குடி பிறப்பினும் எம்மகன் வாழ்வினும்
சொக்கிடும் இன்பும் சூழ்ந்திடும் துன்பும்;

ஒக்கவே எப்பவும் உறுமெனல் இல்லை
தக்கவா றவைகள் தங்கிடும் மாறிடும்.

இந்த இயல்பே இயங்கிடும் என்க
நிந்தை நினையா நெறியர் மனையிலும்.

சிந்தை நிறைந்திடச் சீரியர் இல்லினும்
விந்தை ஆகி விளையும் அன்றே.

செல்வர் மனையின் சீரும் அதுவே,
கல்வி நிறைமனைக் கணக்கும் அதுவே.

அல்வித மதனில் அலைவோர் கூட
செல்வித மதனில் செறிந்திடும் அதுவே.

சீதை வாழ்வில் செறிந்த துயரம்
வாதை செய்தது வாழ்வின் முதலில்.

ஓதை இன்றி ஓடி மறைந்தது.
காதை பின்னர் கடிதுமா றிற்றே.

பெற்றோர், பின்னர் பிறந்தவர், இறந்தபின்
உற்றாள் இனிமை உவந்தாள் வாழ்க்கை.

கற்றாள் அல்லாள், கணவன் வந்தபின்
வற்றா மகிழ்வின் வளமை ஏற்றாள்.

ஆனால் அந்த அமைதி நிலையோ
ஊனார் வாழ்வெலாம் உற்றிற் றாமோ?

மேனாள் நிலைமை மீண்டும் வருமென்
றேனா நின்றாள், ஏனோ அந்தோ!

இரண்டு வருடத் தின்ப வாழ்வு
திரண்டு வந்தது போதும் என்கோ!

அரண்ட நிலைமீண் டணுகிற் றென்றால்
சுரண்டல் வலையின் சூழ்ச்சி என்கோ!

இல்லற வாழ்வின் இனிமைத் தொடர்பாய்த்
தொல்லற முறையில் தோன்றிற் றொருபலன்.

நல்லற முறையில் நல்லாள் வயிறு
சொல்லறம் என்னச் சொலித்தது வாய்த்தே.

குழவியும் பிறந்ததும் குதூகலம் உற்றனள்
மழவிடை அன்ன மணாளனும் மகிழ்ந்தனன்.

அழகிய சேயை அவர்கள் கண்டு
தழலிடை நெய்யெனத் தழைத்தே உருகினர்.

※

**17.** அக்காள் வருகை — அக்காள் வரவோ அலமறல் ஆகும்.

குழவினைப் பெற்ற குதூகலம் முற்றும்
தழலிடை நெய்யெனத் தளர்ந்து கரைந்திடச்

சிசுவின் உடல்நடம் சீரில தாகவே
முசுவெனத் தாயாள் முடங்கிடல் ஆனாள்.

மருத்துவ முறைகள் மதியா திருந்ததில்
திருத்தமும் உதவியும் தேரா திருந்ததில்

தாயும் சேயும் தளர்ந்தனர் உடல்நலம்,
பேயும் போன்றே பிடித்தது நோயும்.

மருதன் உடன்பிறப் புரிமையோர் மாது
சுருதி முறைப்படி சுற்றங் காணக்

கருதி வந்தாள், கண்டதும் சென்றிலள்,
குருதிப் பசைப்பெனக் கூறி இருந்தனள்.

சீதைக் குதவி செய்வேன் எனவும்
வாதை நீங்கும் வரையிருப் பேனெனக்

சுப்பி மொழிந்து சும்மா அங்கு
செப்பிக் கொண்டு சிறப்பாய் அமர்ந்தாள்.

தலைவனை இழந்த தையல் ஏழ்மை
நிலையினில் அவளும் நிம்மதி இல்லாள்

சேய்கள் இரண்டுடன் சேர்ந்துத் தம்பித்
தாய்மனை என்ற தன்மையில் தங்கினள்.

வந்து குந்தினள் வளமை எண்ணி
சிந்தை இன்றிச் சிரத்தை இன்றி

நின்று விட்டாள்; நேர்வதை உணர்ந்தும்
தின்று செல்வாள் சிலநா ளைக்குள்,

என்று நினைத்தார் இளைஞர் இருவரும்;
நன்று நினைத்தது நாடிற் றிலதே.

அள்ளையில் முள்ளென ஆட்டி வைத்துத்
தள்ளையை வைவாள் தப்புகள் கூறியே.

உடல்நலக் குறைவால் ஊக்கிப் பணிசெய
அடல்நனி இல்லாட் காற்றல் இலதால்,

பாவம், மருதன் படைத்த ஊதியம்
ஏவல் பூனைகட் கெங்ஙனம் போதும்?

ஊணில் குறைவு உற்றிடின் சுப்பி
வீணில் பொல்லாங் குடனுடன் வீசுவள்.

குறைவு காணலும் குற்றம் கூறலும்
நிறைவுப் பணியென நேர்ந்தனள் அதுமுதல்.

இங்ஙனம் நடக்கும் இல்லற வாழ்க்கை
எங்ஙனம் அமைதி ஏற்பட ஓங்கும்?

நலமிலாச் சீதை நாள்நாள் வாடி
பலமிலா தோய்ந்தாள் பன்னாள், பாவம்!

*

18. குடிதனில் அடைக்கலம் — வறுமை வளர்ந்தது மதுக்குடி புகுந்தது.

தாய்வீ டெனவே தம்பி வீட்டினைப்
பேய்போல் காத்துப் பிதற்றிச் சுப்பி

நோய்வாய்ப் பட்ட நுண்ணிடைச் சீதையை
நாய்போல் குரைப்பாள் நாதனில் லாக்கால்.

சண்டை பிடிக்கச் சத்தியும் இல்லாள்
தொண்டை வீக்காள் துளியும் சீதை;

கொண்டை முடித்துக் கூடிய மட்டில்
தண்டை சிலிர்க்கத் தட்டுவள் சுப்பி.

இந்த முறையில் இன்ப இல்லம்
சிந்து கண்ணீர் சிதறி வீழ

நிந்தை யீயும் நிரயம் ஆகி
உந்து துன்பத் துருமா றியதே.

மாறு பாடோ மனையில் தோன்றி
வேறு பட்ட வினைகள் ஆகி

தாறுமா ருகத் தவறுகள் முளைத்தும்
கூறுவா ளல்லள் குணக்குன் றன்னாள்.

காலை சென்றுக் கடமை செய்து
மாலை திரும்பும் மருதன், வெகுநாள்

வேலைத் தொந்தரை விடுதி இலதால்
நீலிச் செயலை நினைந்தும் இருக்கான்.

மெல்ல மெல்ல மிடியின் செயலும்
எல்லை இல்லா தேகி வருத்தத்

தொல்லை எல்லாம் துருத்தி வரலைச்
சொல்ல வல்லார் சொல்லால் அறிந்தான்.

பிச்சை கேட்டாள் பிழைக்க வந்தாள்
இச்சை என்ன இல்லம் இயங்க,

வைச்ச காசும் வகையிலா தொழிய
நச்சு மிருந்த நரகமாத் தோன்றும்.

அக்காள் செயலின் அறுதி முற்றும்
தக்காள் உடலில் தங்கி உறுத்த,

மிக்காள் செயலை மேன்மேல் அறிந்தும்
எக்கா ரியமும் இழையான் ஆனான்.

துன்பப் படுவான் துணிந்து தடுக்கப்
பின்பெதும் செய்யான் பிறர்நட் புறவை

நம்பி மருதன் நாடினான் கட்குடி
இன்பம் விளைக்கும் இயல்பதில் கண்டே.

தொடங்கிய காலை துளிகட் குடியும்
மடங்கி வைத்தது மலைவை மறைத்தது ;

அடங்கி இருந்த அகப்பேய் எழும்பிச்
சடங்கொன் றின்றிச் சார்ந்தது தீமையில்.

*

19. கட்களி ஆட்டம் — தேறற் செய்கை மீறத் தொடங்கல்.

தேறற் பழக்கம் தேட்கடி நஞ்சில்
ஊறல் கொண்டே உறுதியில் ஏறும்.

மருதன் கருத்தோ, மனைதரும் துயரம்
கருதல் போகும் கவினுறும் என்பதே.

ஒன்று நினைக்க ஒன்று முளைத்தல்
என்றும் காணும் இயல்பே அன்றோ?

தேறல் வாயில் தித்திக் கையிலே
மாறல் கண்டான் மகிழ்ச்சி தனிலே.

துன்பக் கவலை தொலைந்து நிற்கும்
இன்பக் கனவும் ஏற்றம் அடையும்

மூளை அடங்கி முனைப்பு மழுங்கி
ஆளை அமிழ்த்தி அகம்பெறும் உறக்கம்.

தேறல் மயக்கம் தீர்ந்த உடனே
மீறி எழும்பும் மிதமிலாச் சோர்வே.

உடல்கனம் ஆகி உறும்பணி ஆற்ற
அடல்கனம் குன்றி ஆட்டும் அயர்வே.

ஊதியம் தன்னில் ஒருபெரும் பகுதி
பேதியின் கழிவெனப் பிணங்கி மறையும்.

வீட்டுள் கிடக்கும் வெறும்வயிற் றுயிர்கட்
கூட்டி வைக்க ஊதியம் போதுமோ?

வறுமைப் பிணியும் வாட்டி வதக்க
சிறுமை அடைந்துச் சீற்றம் கொள்வான்.

தாய்கள் வீட்டுள் தழைதல் இல்லார்
சேய்கள் அலறிச் சிரிப்பதை விட்டன.

மருதன் மாறி மாற்றான் ஆனான்
தெருவில் சுட்டும் திருவிலன் ஆனான்;

அடிக்கடி சினமுற அடக்கம் பிறழ்வான்
குடிக்கவன் அடிமைக் குழியில் ஆழ்வான்.

கூழுக் கொருபணம் கொடுவென் றழுதால்
பாழுக் கிறைக்கப் பணமே தென்பான்.

சேயிற் குணவிடும் செய்தி கூறத்
தாயிற் கில்லை தைரியம் என்க.

சினமும் மிக்குச் சீறி எறின்
மனமும் மாறும் மதிப்பும் குறையும்.

வறுமையின் அழுகை வளரக் கண்டால்
பொறுமை இழந்து பொத்தென் றடிப்பான்

சீதையின் இந்நிலை செப்பவும் ஆமோ?
வாதைகள் மீண்டும் வளரத் தொடங்கின.

பசிப்பிணி ஒருபுறம், படும்அடி மறுபுறம்,
சிசுப்பிணைப் பதனுடன் சேர்ந்திட அழுவாள்.

20. மீண்டும் வாய்ப்பு — மற்ருெரு சிசுவும் உற்றனள் அந்தோ.

இல்லத் திடும்பைகள் இலகுவில் வளர்ந்து
சொல்ல ஒண்ணு சூழ்ச்சிகட் கிடனுய்க்

கவலைகள் பெருகி களைகளாய் மாறி
அவலமே எங்கும் அலர்ந்திடும் செழித்தே.

சோற்றிற் குவந்த சுப்பியை அவைதொடா,
கூற்றெனத் தொடர்ந்த குழவிகள் உணரா.

குடியினில் ஆழ்ந்த கொழுனனும் அசையான்
செடிகொளா மென்கொடி சீதையே படுவாள்.

இடும்பைகள் நிகழ்த்தும் இயல்புமுன் அறிவாள்,
குடும்பமும் அவைகளால் குறுகுவ தறிவாள்.

குமரிப் பருவம் கூலி செய்த்தில்
தமரும் தானும் தழைத்தது நினைந்தாள்.

அனுபவம் காட்டிய அதனை எண்ணி
மனுநெறி அதுவென மகிழ்ந்து கொள்வாள்.

திங்கள் ஆறில் திருந்திட மேனியும்
மங்கை தொழிற்கு மறுபடி சென்ருள்

ஊதியம் இருவர் உவப்பில் கொணர
போதிய மட்டும் புதுக்கூ ழுண்பார்.

திட்டும் குறையும், தீரும் பசியும்,
கொட்டும் அடியும் குறைந்து மறையும்.

சுப்பியின் பொல்லா சூழ்ச்சிகள் ஒழிய
செப்பிய இடும்பை சிதறிப் போயின.

இந்த முறையில் இல்லம் ஒருவா
றுந்திச் செல்லும் உறுதியில் நின்றது.

செழுமை ஒருபடி சிரித்துப் பொங்க
பழமைப் படிப்பினை பாங்கில் அணுகிடும்.

முதற்கண் பிறந்த முகநிகர்க் குழவி
குதலே மொழியா குறுநடை அடையா,

அதன்முனம் பெண்ணை ஆடவன் நெருங்கினன்;
சுதன்முறை அளிக்கச் சூழ்ந்தனன் இரவில்.

சீதையின் மேனி சிறிதே தேர்ச்சி
வாதையில் நீங்கி வந்திருந் ததுவே.

ஆடவன் வலேயை ஆட்டி வீச
ஈடலாச் சீதை எளிதில் விழுந்தாள்.

மீண்டும் வயிறு மெல்ல வாய்த்தாள்
கூண்டில் சிறைபடு குருவிபோல் ஆனுள்.

பத்துத் திங்கள் பசப்புறு நிலேயில்
ஒத்துக் கிடந்ததும் ஒருசிசு வீன்ருள்.

மேனியும் வாடி மெலிந்து கிடக்க
ஈனின குழவி எடுப்பிலா திருந்தது.

*

**21. மீண்டும் அவலம்**

**அவலம் ஓங்கிட கவலை ஓங்கும்.**

*தீர்த்தநீர் ஆடித் திருதலம் சுற்றி*
*மூர்த்தியை வணங்கி முடியும் களைந்து*

*வேறுபல் தவங்கள் வேட்டியும் செல்வர்பால்*
*பேறெனப் புகலப் பிறவிகள் பிறவா.*

*இடும்பைகள் பட்டும் இரந்தும் உண்டும்*
*குடும்பமே காக்கும் குணமதை இழந்தும்*

*குடிசை வீட்டில் குழவிகள் தோன்றல்*
*கொடுமையின் பலனோ, குதூகல விளைவோ?*

*பொறுக்க ஒண்ணுப் பொல்லாங் குற்றும்*
*குறுக்கு வழியில் கொள்கை செலுத்தி*

*உலக வாழ்வில் உவப்பை உறவே*
*அலகில தொன்றும் ஆற்றுள் சிதை.*

*ஒருசிறு சேயை ஒழுங்காய் வளர்த்த*
*வருமுறை வரவை வாய்க்கப் பெருதாள்*

*இருகுறு சேய்களை எவ்வா றணைந்து*
*அருமுண வீவாள் அற்ப உடலினள்?*

*தாயின் உடல்நலம் தளர்ச்சி யடையச்*
*சேயின் நலமும் சிதறும் அன்ருே?*

*வாய்விட் டலறி வளமும் குன்றி*
*பேய்வீ ரெனல்போல் பிதற்றும் சேய்கள்.*

வயிறு வாய்த்த வளமை நாளிலும்
எயிறு கடித்திட் டேக்கம் கொண்டாள்.

கருவும் முதிரக் கைகால் அயர
ஒருபணி செயவும் உறுதி யில்லாள்.

சேய்பிறப் புறுமுன் சிலநாள் தொழிற்குப்
போய்வர வொழிக்கப் பொன்படைப் பொழிந்தது.

ஈன்றிய பிறகும் ஏறிய நோயால்
தோன்றிய மெலிவு தொடர்ந்தே நின்றது.

வேலைக் கேக விடாத நிலையில்
கூலிப் பணமோ கூடா தாகக்

கந்த லுடையில் களிக்கூ ழின்றி
நிந்தை வசையில் நின்று தவித்தாள்.

மருதன் வருவாய் மதிப்பில் நிற்கா,
ஒருதின உணவும் ஊட்டப் போதா,

கவலை பெருகக் கட்குடி யதனில்
அவலம் ஒழிக்கும் அவத்தை கண்டான்.

முன்னாள் போல முடங்கின இடும்பை
அந்நாள் முற்றி அன்னையைச் சிதைக்கும்.

என்ன செய்வாள் இழிநர கதனினும்
மன்னும் நிலையில் மயங்கி வீழ்வாள்.

※

22\. சூழ்வினைப் பலனே — குட்டிக்கலகம் ஒட்டித்திகழ்ந்தது.

சுப்பியின் மூளை சூழ்ச்சிகள் விளையும்
ஒப்பிலாப் புலமாய் உளவு படைத்தது.

தம்பியின் இல்லம் தனக்குரித் ததுஎன
வம்பினில் வழக்கினை வகுத்து நின்றது.

பின்னர் நுழைந்த பேதைக் கெங்ஙனம்
நன்னர் உரிமை நாடும் என்பாள்.

சீதை இதனைச் செவியிலும் கொள்ளாள்,
ஓதை செய்யாள் ஒன்றும் கூறாள்.

தம்பியின் வருவாய் தனதெனச் சுப்பி
வம்பில் பேச்சு வளர்த்தி நிற்பாள்;

அதனையும் ஏற்கா அசட்டைக் கண்டு
கதனையின் வெடிபோல் கத்தித் திரிவாள்.

சமயம் வருங்கால் சண்டைக் கிழுப்பாள்
இமியும் சீதை இணங்காள் அதிற்புக.

அசட்டை செய்வதாய் அவளை வைதுப்
பசப்பொடு திரிவாள், பாசாங் குறுவாள்.

வாதுக் கிழுத்தும் வலையில் படாததால்
ஏதும் செய்ய இயலாள் சுப்பி

குழவிகள் மூலம் குட்டிக் கலகம்
எழுவே செய்ய எதிர்பார்த் திருந்தாள்.

ஓரொரு பொல்லா ஓரை வரவே
யாரொரு ஆளும் இல்லாப் பொழுது

சிசுக்கள் வாசலில் சேர்ந்தா டுகையில்
கொசுக்கள் கடியில் கூவி அழுதன.

சுப்பிதன் சிசுவை சீதைச் சிசுதான்
ஒப்பி அடித்ததென் றுரைத்து வைதாள்.

சீதை மறுத்துச் செப்பின பிறகும்
ஓதை யிட்டும் உளறித் திரிந்தாள்.

மற்றும் ஒருநாள் மக்கள் உண்கையில்
சற்றுக் கூழ்பெற சபலம் கொண்டனர்.

இருவர் மக்களும் இழுத்தடித் திட்டே
ஒருவர்க் கொருவர் உருய்ந்து நின்றனர்.

அதனால் அமைதி அழிந்ததென் றியம்பி
சத்மாய்ச் சீதையைத் தள்ள நினைத்தாள்.

மருதன் வரவும் வசைபல கூட்டி
நிருதர் மூச்சினில் நிரம்பக் கொட்டினள்.

அவனோ குடித்திட் டணுகின னகலின்
தவறோ சரியோ தானறி கில்லான்.

சீதையை அடித்துச் சீராய் நடக்கும்
பாதையில் செல்லெனப் படுத்திட் டுறங்கினான்.

23. தற்கொலை துணிதல் — வாழ்விலாச் சங்கடத்தில் சாதலே நன்று.

ஐயோ, பாவம்; அந்தோ துயரம்!
குய்யோ முறையோ, கூறுவர் எவருளர்?

யாதொரு பாவமும் இயற்ரு திருந்தும்
சீதைக் கடிகள் செறிந்து விழுந்தன.

நோய்வாய்ப் பட்ட நுண்ணிய மேனி
தீவாய்ப் பட்ட தெருப்புழுப் போலத்

திணறி நெளிந்தது, திண்ணையில் சாய்ந்துப்
புணரி அலைச்சலில் புன்மைப் பட்டது.

அடுத்த அகமும் அறியாள் சீதை
மடுத்த வாயினள் மானம் காப்பாள்

அடிபட் டழுந்தியும் அழுகை வெளியிடாள்
இடிபட் டொழியினும் இமிபுறங் கூருள்.

இவ்வா றடிகள் எற்றம் அடையச்
செவ்வாய்க் கோளென செறிந்தது புகைச்சல்.

சீதையின் உடலோ சிறிதும் தாங்கா
வேதனைப் பட்டு வெதும்பி அழியும்.

சுப்பி அரக்கியின் சூழ்வினை முற்றி
உப்பிச் சென்றிடும்; உணரான் குடியன்.

தப்பிப் பிழைக்கும் தகும்வழி அறியாள்,
மப்பில் மூளை மழுங்கச் சாய்ந்தாள்.

வாழ்விலாச் சங்கட வாழ்க்கையிற் சாதலே
தாழ்விலா நலமெனச் சாற்றின ஔவைக்

கருத்தையே சீதை கருதினள்; அதுவே
பொருத்தமாம் என்றே புந்தியில் கொண்டாள்.

தற்கொலை முறையோ, தகையோ என்றும்
சொற்களை ஆய்ந்தாள், சூழ்வினை அறிந்தாள்.

வேறொரு வழியும் விதியெனப் படவிலை,
மீறிய வேளையில் மேவின திதுவே.

தன்னுயிர் மறைந்தால் தன்சிசுப் புரப்பார்
மன்னிடல் இலையென மலைவும் உற்றாள்.

தனைப்போல் சேய்களும் தனிமையில் துன்புறும்
நினைப்பே கொள்வாள் நெளிவாள், அழுவாள்.

'யானோ சாவேன், என்சிசு மாரும்
ஏனோ சாகா திருத்தல் வேண்டும்?

பொல்லா உலகின் புன்மை வேண்டாம்,
எல்லாம் மறைவேம், இதச்செயல் இதுவே.

எவ்வுல கேகினும் இத்தனைக் கேடு
கவ்விடும் என்றல் கனவிலும் இலையே.

பின்வாழ் வொன்று பேணினோம் ஆகில்
நன்மையே ஆம்'என நவின்று துணிந்தாள்.

❀

24. கொடிய செய்கை

கொடிது கொடிது
கொடுமை கொடிது.

நள்ளிர விருட்டில் நாட்டம் கொண்டோர்
கள்ளரில் வலுத்தக் கன்னக் கோலரும்,

காம வலைசூழ் கசட்டினத் தினரும்
எமம் உணரா இழிகு தினரும்

இரவு பகலாய் இமையிலர் ஆகிக்
கரவு நிறைகொளக் காலம் கழிப்பர்.

ஏனைய மக்கள் இனிதுற உறக்கம்
தானே யமரத் தாங்குவர் அமைதி.

சீதை அன்று சிசுக்களை அணைந்தே
ஓதை இன்றி உறக்கம் இன்றி

விடியலுக் கொருகடி வீதித் திண்ணையில்
கொடிய கவலையில் குமுறிக் கிடந்தாள்.

பகலவன் எழுமுனம் படர்ந்த இருளில்
இகலினர் அல்லா இருசிசு மாரைத்

தோளில் வீழ்த்தித் துணிந்து குளக்கரை
ஆளின் நாட்டம் அணையுமுன் சென்றாள்.

என்னே துணிச்சல், என்னே துயரம்,
கொன்னே வாழ்ந்தாள் குழவிகள் எண்ணாள் ;

குழவியர் சாகின் கொலைகள் ஆகும்
எழவரும் எண்ணம் இன்றியே சென்றாள்.

குளக்கரை குற்றுயிர் கூடக் காணுள்,
அளக்கரும் குரலில் ஆந்தைதான் அலறும்.

ஆழ்ந்த நீரிடை அலறிடு நெஞ்சில்
தாழ்ந்த அழுகையில் தத்தளிப் புடனே,

இளஞ்சிறு குழவிகள் எடுத்தெறி ந்திடவே
குளஞ்செறி நீரில் குப்பென் றவைகள்

தலைகீழ் வீழ்ந்துத் தண்ணீர்க் குள்ளே
அலைகீழ் மூழ்கி அமிழ்ந்தன; அந்தோ!

நெஞ்சுரம் மீற நிலநெறி நொந்திட்
டஞ்சுதல் இன்றி அவளும் வீழ்ந்தாள்.

வீழ்ந்த ஒலியோ வெகுதொலை மட்டும்
ஆழ்ந்து சென்றது, ஆந்தையும் அலறும்.

அருகோர் ஊரினன் அவ்வழி செல்கையில்
உருவொன் ருழ்நீர் விழுமொலி கேட்டனன்.

திடுக்கிட் டவ்வழி திரும்பி நோக்க
அடுக்குறு அலைகள் அசைவுறக் கண்டான்.

அழுக்குச் சுமையுடன் அணுகியோர் வண்ணுன்
வழுக்கிடும் கழுதை வைப்புடன் வந்தான்.

தொப்பென உருவீழ் தொனியைக் கேட்டுச்
செப்பிலா வியப்பில் சென்றனன் பார்த்தான்.

**25. உயிர் தப்பியது**

**கழிபே ரிரக்கம் காத்தல் செய்யும்.**

வழிப்போக் கவனும் வண்ணா னவனும்
சுழிப்போக் கறிந்து சூழ்ந்தனர் குளக்கரை.

நீருள் சலனமும் நிரம்பிய அலைகளும்
தேரும் நீர்நிலை தேர்ந்து விரைந்தனர்.

ஒருமுறை மூழ்கி ஒருமுறை மேலெழும்
உருவமொன் றங்கண் உற்றிடல் கண்டார்.

கூந்தலும் சேலையும் கூடிய உருவம்
மாந்தரில் பெண்ணென மதித்தனர் உடனே.

வழியில் வந்தோன் வாட்டமாய்க் குதித்துக்
கழியில் இரக்கம் கண்கள் மிளிரக்

கூந்தலைப் பற்றிக் குளக்கரை மட்டும்
நீந்திட வந்து நிலத்தினில் விட்டான்.

வண்ணான் உதவிட வழியாள் முயல
தண்ணார் உடலில் தண்ணீர் வெளிவர

மேனியைப் பிசைந்து மெல்லெனத் தேய்த்திட
ஊனிடைச் சூடும் உற்றிடச் செய்தனர்.

இந்தச் சிகிச்சை இயற்று வதன்முன்
சந்தைக் குழுப்போல் சார்ந்தனர் ஊரார்.

காவல் காரன் கடுகவே வந்து
ஏவல் தந்தும் இடமதைக் காத்தனன்.

வண்டி அமர்த்தி வனிதை உடலை
கொண்டு சென்றனன் குற்றுயிர் அறிந்தே.

அரசியல் மருத்துவ அலுவல் அகத்தார்
வரிசையில் சிகிச்சை வழங்கினர் உடனே.

மூர்ச்சை தெளிய முழுப்பகல் கடந்தது
தேர்ச்சி உற்றுத் திருதிரு என்றனள்.

எந்த உலகில் இருக்கிறேன் என்ற
சிந்தை யுறவே சிதறினள் மூளை.

குழவிகள் எங்கெனக் கூவி அழைத்தனள்,
தழலிடை புழுவெனத் தயங்கிக் கிடந்தனள்.

குழவிகள் சென்றன கூற்றுவன் பாலெனும்
இழவுறும் செய்தி இயம்பா திருந்தனர்.

மூளையும் மேனியும் முன்னிலை அடையும்
வேளையும் வரற்குள் விடிந்தது மூன்றுநாள்.

சீதையை அதன்பின் சேர்த்தினர் சிறைக்குள்.
யாதென அறியாள் இடுக்கினில் கிடந்தாள்.

குழவிகள் இறந்த கொடிய செய்தி
தழலிடைக் கம்பியில் தாக்கிடும் அவளை.

தனக்கேன் சாவிலை தனயர்க்கே னுண்டே
மனக்கேத முற்று மயங்கினள் கிடந்தாள்.

❀

26. தண்டனை
அந்தோ

நீதிமன்றம்
ஓதிடும் தண்டம்.

தற்கொலை முயன்றதும் தன்சிசு கொன்றதும்
முற்படு குற்றம் மூன்றெனை வகுத்துச்

சீதையின் மீது சுமத்தினர் வழக்கே.
நீதியை முற்றும் நிகழ்த்த வேண்டில்

சுப்பியும் மருதனும் சூழ்ச்சிய ரென்று
செப்பி வழக்கர் சேர்த்த முயன்றனர்.

சான்றுகள் கிடைக்காச் சாக்கில் விடுத்தும்
தோன்றிடும் எவர்க்கும் தூண்டுகோல் அவரென.

மருதனும் சுப்பியும் மனத்துள் கறுக்கெனக்
குருதி சலிக்கக் குறுகுறென் றொளித்தனர்.

நீதி மன்றுள் நீதி புரக்கும்
தேதி வந்ததும் தெருவெலாம் கூடும்.

சீதை குனிந்த சிரசுடன் நின்றாள்,
ஓதை யற்ற உயிர்ப்பிணம் போல்வாள்.

நடப்பதைப் பாராள் நாட்டமும் கொள்ளாள்
கடப்பதே கடனெனக் கடவுளை நினைத்தாள்.

கொலைக்குற் றத்தைக் கொணர்ந்த வழக்கர்
நிலைக்கொரு எதிர்ப்பும் நினைக்கவும் மாட்டாள்.

தற்கொலை முயன்றாள் தானே தூக்கில்
முற்பட விழவும் முனைந்து நின்றாள்.

நீதிபர் கேட்க நேர்விடை அளித்தாள்,
" ஆதியி லிருந்தே அனைத்தையும் வெறுத்தேன்,

வாழ்வை வெறுத்தேன், வாவியில் விழுந்தேன்,
ஏழ்மைச் சிசுக்களை எவரே காப்பார்!

என்றொரு எண்ணம் இயங்கக் கொன்றேன்,
என்றன் வினைக்குவே றெவரும் பொறுப்பிலர்,

தெரிந்து செய்தஇத் தீமைக் கென்னை
அரிந்து கொல்வீர் ஆக்கிவீர் தூக்கும்;

அதுவே என்றன் ஆர்வமும் ஆசையும்,
இதுவே செய்யின் இனிதுற மாள்வேன்"

என்று கூறினள், இயலா வேசம்
நின்று கேட்டவர் நிரம்பினர் கண்ணீர்.

நீதிபர் முதலாய் நிரம்பிய மக்களோ
சீதையின் கற்பைச் சிறப்பித் தேத்தினர்.

மருதனைச் சுப்பியை மன்றினுள் இழுக்காச்
சுருதியை அறிந்துச் சுட்டினர் கற்பென.

நீதிபர் சான்றெலாம் நிறுத்திப் பார்த்தே
ஓதினர் தீர்ப்பினை ஓரா றுண்டுகள்

சிறையில் கழிக்கச் சிட்சை வகுத்தனர்
முறையினைக் கேட்டோர் முணுத்துச் சென்றனர்.

⊕

**27. விட்டினான் மாறுதல்** **சூழ்வினைச் சுப்பியின் பாழ்வினை மறைவு.**

நீதிமன் றத்தில் நிகழ்ந்தது முற்றும்
ஆதியி லிருந்தே அறிந்தனன் மருதன்.

தற்கொலை முயற்கும் தன்சிசுக் கொலைக்கும்
கற்பினள் ஒருத்தியே காரணம் அல்லள்

தானும் சுப்பியும் தண்டனைக் குளரென
வானும் அறியும், வளநா டறியுமென்

றவனும் நொந்திட் டயலிடம் செல்லான்,
அவளும் நிந்தைக் கஞ்சியே ஏகாள்.

நீதிபர் முன்னில் நிகழ்த்தின விடையில்
ஏதும் தம்மீ தியம்பா தெல்லாம்

தானே பொறுப்பெனத் தந்த உறுதியை
ஊனே உருக உரைத்தனர் கேட்க

மருதன் புகழ்ந்தனன்; மலிநீர் உகுத்தனன்.
குருதி பொங்கக் குதித்தனன். அதன்மேல்

சுப்பியை வெறுத்தனன் சூழ்ச்சியை நிந்தித்
தெப்பொழு தவளை ஏற்றி விடலாம்

என்றிருந் தனனே. இயற்கையில் கெட்டவள்
கொன்ற பாவியைக் கூட்டிக் கொளவோ

இந்த மனநிலை ஏற்றனை என்று
சொந்தத் தம்பியைச் சுட்டித் திட்டினள்.

மருதன் வீடோ மல்லுப் போர்போல்
கருத ஒண்ணுக் காரிருள் சூழ்ந்தது.

வீட்டுக் குள்ளே வெறுப்பில் சுப்பி
காட்டுப் புலிபோல் கத்திக் கிடப்பாள்.

தம்பி எங்ஙனம் தனிக்குடி நடத்துவான்
அன்பில் லாதாள் அவளை வெருட்டி,

இல்லாள் ஒருத்தியை ஈட்டிக் கொள்ள,
எல்லா முயற்சியும் எடுத்தனன் உடனே.

வேறொரு தெருவில் வீடொன் றமர்த்திச்
சோறும் ஆக்கச் சுமங்கிலி கொண்டு

வாழத் தொடங்கினன். வந்தவள் சுப்பியைக்
கேழல்போ லுருமிக் கிளப்பி விட்டனள்.

சுப்பியும் வெளியில் உலகச் சூழலில்
தப்பித் திகைத்தாள், தானும் பிழைக்காள்.

பிச்சை எடுத்துப் பிணிவாய்ப் பட்டும்
இச்சை போல இயங்காள் ஆகி

துச்ச வாழ்வைத் தொலைத்துப் போக்க,
எச்சம் மடிய எவரும் அழாராய்,

உலகின் பளுவும் உதறக் குறைய
கலகம் குறையக் காணு தானுள்.

28. இளையவள் குடித்தனம் — கடலைப் படவே கலங்கும் நெஞ்சும்.

இளையவள் ஏற்றதும் இல்லத் தலைமை
முளையதில் காட்டினள் முரப்பாக் காரம்.

கண்டதைக் கேட்பாள் கனல்வாள் இலையெனில்,
சிண்டையைப் பிடிப்பாள் சீக்கிரம் கொடாவிடில்,

தலைமை தனதெனில் தலைவன் மறுக்கில்,
உலையைப் போல உருட்டுவாள் சினமும்.

குடிக்கக் காணில் கொடுக்கைக் காட்டுவள்
அடிக்க வந்தால் அழுகாள் மோதுவாள்.

முந்திய அடக்க முறைகள் மாறிச்
சிந்திய கண்ணீர் சிலிர்இடம் ஆகும்.

துணைவிக் கடங்கித் தோற்றனன் மருதனும்
இணைய செய்தியை எண்ணிலன் கனவிலும்.

சீதையை வெருட்டின செய்வினை முற்றும்
பாதையை விட்டுப் படர்ந்தது அவன்பால்.

பழிக்குப் பழியாய்ப் பாவி வந்தாள்
வழிக்கவள் கொணர வகைகள் அறியான்.

சீதையை அறிந்துளன், சின்னியை அறிந்தான்
பேதம் விளக்கப் பிறபொருள் அறியான்.

ஆனை பூனை அளவிற் பேதம்,
மோனை எதுகை முறைவித் தியாசமே.

தேவர்க் கசுரர் தெரிக்கும் பேதமே
மேவச் செய்யும் மிதமாய்க் குறிக்கின்.

சீதையை விட்டுச் சின்னியைத் தழுவல்
பாதையை விட்டுப் பருக்கையில் புகல்போல்

சிக்கன முறைகள் சின்னியோ அறியாள்
தக்கசெல் விகமே தாங்கிட விழைவாள்.

கடனெனும் சொல்லே கண்டிலன் வாழ்வில்,
இடனது மாறவே இடம்கொளும் அதுவும்.

சின்னி கொள்கடன் சில்லறை ஆகிப்
பன்னி அதுவே பரவும் பெரிதாய்

இலங்கை வேந்தன் ஏறிடும் கடனில்
கலங்கி நின்றிடின், கணவன் எங்கே?

ஐந்தா ருண்டில் அகமும் புறமும்
உய்ந்தா னிலையென ஓங்கும் கடனே.

மருதன் கவலைம் மைக்குழி ஆழ்ந்ததில்
கருத ஒண்ணு கடுமைப் பட்டான்.

குடியின் வன்மை குமரியின் திட்டு
முடியில் கடனும் முளைத்திடும் கொடுமை

இவையெலாம் மருதன் இன்மனம் கெடுக்க
அவைதனில் வெளியுற அச்சம் கொண்டான்.

**29.** தண்டக் குறைவு. | சிறைக்கோட்டமோ அறக்கோட்டமோ

ஆறு வருடமும் ஆறுதிங் கள்போல்
வீறு குறைந்தது, வெறுஞ்சொல் அன்று.

சீதையைக் கண்டோர் சீர்கெட் டிலளாய்
வாதைச் செயலால் வந்தனள் என்பார்.

சிறையதி காரிகள் சீதையை நன்கே
முறையில் நடத்தி முனைந்தனர் அன்பில்,

வேலையைச் செய்வதில் விருப்பம் கொண்டோள்
சேலையை இறுக்கிச் செய்தனள் சிறப்பாய்.

உணவும் கணக்கில் ஊட்டினர் ஆக
மணமும் கொண்டு மலிந்தது உடல் நலம்.

கல்வி யிலாதார் கல்வி கற்றிடச்
சொல்லித் தந்தனர் சிறைக்கூ டத்தில்.

சீதை அதனைச் சிறப்பாய் ஏந்தி
ஓதை இன்றி உணர்ந்து கொண்டாள்.

மூன்றாண் டினிலே முறையாய்க் கற்றுத்
தோன்றினள் கற்றோர் தொடர்பினில் புகுந்தே.

ஒழுக்கமும் கல்வியும் ஒன்றி யுறவே
விழுப்பமும் கண்டு வியந்தனர் ஆட்சியர்.

குற்ற வாளிகள் குழுவினை மேய்க்க
உற்ற அலுவலை உதவினர் அவட்கே.

ஐந்தாண் டினிலே ஆற்றிய பணியில்
உய்ந்தாள் எனவே ஓராண் டழித்து

விடுதலை செய்து வீட்டிற் கனுப்பி
நடுவரின் மதிப்பில் நற்சான் றளித்தனர்.

சிறைச்சா லையினைச் சீர்ப்படுத் திடவே
அறச்சா லையாக்கின அருந்தே வியைப்போல்

சீதையும் மற்றச் சிறையாட் களைத்தம்
வாதையில் நீக்கி வழங்கினள் ஒழுக்கம்.

விடுதலை பெற்றாள் மெல்லியல் எனுஞ்சொல்
சடுதியில் கேட்ட சகல ஆட்களும்

பிரிவுப சாரம் பெரிதும் சொல்லி
உரிமையில் தழுவி உண்மையில் அழுதார்.

'சீதையைப் போன்ற சிறையாள் உற்றால்
வாதையும் மறையும் வளநா டதனில்

சிறைவா சங்கள் சிறிதும் வேண்டாம்
முறையாய் மிளிரும் முழுநா' டென்று

சிறைக்கோட் டத்தார் சிறப்பாய்க் கூறி
இறைக்கோட் டத்தார்க் கிசைவும் அனுப்பினர்.

இந்நற் றாளை ஏந்திக் கொண்டு
சொந்தநல் லூர்ப்பால், சேர்ந்தனள் சீதையே.

30. அமைதி உற்றது.

அலுவல் கிடைக்க அமைதி பெற்றது.

கணவன் இருப்பிடம் கண்டு பிடிக்கும்
குணமது சீதை கொண்டே தேடினள்.

அக்கம் பக்கத் தயலார் மற்றூர்
பக்கல் சென்று பாங்காய் வினவினள்.

'மருதன் மற்றொரு மனைவியை மணந்துக்
கருத ஒண்ணு கட்டம் உறுகிறுன்;

சின்னி கையில் சின்ன பின்னம்
இன்னும் படுகிறுன் இழிவாழ் வுறுகிறுன்

சுப்பி ஒழிந்தாள் சுடுகா டேகினள்,
தப்பினன் இல்லை தம்பி பின்னும்;

புலிவாய்த் தப்பிப் புற்றுள் பாம்பின்,
பலியாய் ஆனன், பாவம், அந்தோ!,

என்ற செய்தி எங்கும் கேட்டாள்.
அன்று கணவன் அகன்ற வேளையில்

சென்று அவன்படும், சீரை அறிய
நின்று கேட்டனள் நிலைமை அறிந்தாள்.

வீடு குடிக்கு வேண்டி அங்கு
தேடி வந்ததாய்த் தெரிவித் தவளும்

துப்பது கண்டு தொடர்ந்து பேசி
எப்படி வாழ்க்கை இருப்பதும் அறிந்தாள்.

சின்னி இருக்கும் வரையில் சீராய்
நன்னர் வாழ்வு நாடுதல் ஆகா

தென்றவள் கண்டாள், இசைவை மாற்றிச்
சென்றனள், விடுதலைச் சிறையார் சபைக்கே.

சங்கச் செயலர் சந்நிதி சென்றே
அங்கவள் கொணர்ந்த அத்தாட்சி காட்டி

பஞ்சுநூ லாலையில் பதவி ஒன்றைக்
கெஞ்சுதல் இன்றிக் கேட்டடைந் தனளே.

கற்றவள் ஆதலின் கண்ணிய மாக
நின்றிடும் அலுவல் நேரிடப் பெற்றனள்.

மருதனும் ஆளாய் மதிப்பிலா திருந்தான்,
கருதிடின் ஊழின் காரியம் வியப்பே!

சீதை மேனி செழித்து நிற்க
ஓதை யின்றி உடையும் மிளிர

உருவம் அறிய ஒற்றுமை காண
அருமை என்க அருகுறு தார்க்கே.

மருதன் மேனி மதுக்குடி யதனால்
கருத ஒண்ணு கடுமைப் பாட்டால்

சின்னி ஆற்றும் சீரழி வாற்றால்
உன்ன லாகா உருமாற் றடைந்ததே.

ஆத லாலே அன்னார் இருவருள்
காதல் அறிமுகம் காணு திருந்தது.

சீதை மட்டும் செறிஅடை யாளம்
பாதை கிட்டிடப் பார்த்து மகிழ்ந்தாள்.

31. மீண்டும் இல்லறம் — நீங்கினர் கூடிட ஓங்கிடும் அன்பும்.

ஒருநாள் மாலை உலையடுப் பூதித்
திருநாட் சமயல் தேர்ந்திடச் சின்னி

எச்சரிப் பின்றி எரியினைத் தூண்டக்
கச்சதும் ஆடையும் கடுகப் பற்றிக்

கூந்தலும் முற்றிக் கொழுந்துவிட் டெரிய
ஆந்தையின் குரலில் அமுதுவீ றிட்டனள்.

அக்கம் பக்கத் தாட்கள் வருமுன்
சொக்கப் பனைபோல் சூழ்ந் தெரிபோல்

கூறையும் பற்றிக் குதிகொளும் கனலே.
வேறெதும் பற்றிடா விருப்பினில் மக்கள்

முகட்டினைத் தட்டி வீழ்த்தினர்; உள்ளே
சகட்டினில் கட்டிய சகமா டெனவே

அகப்பட் டுளைந்த அகந்தையள் சின்னி
நுகப்பட் டிழிந்து நோக்கிடம் இன்றிக்

கரிந்து போயினள் கனல்வாய்ப் பட்டே.
எரிந்த உடலை எடுத்தனர் இறுதியில்.

இதற்குள் இரண்டொரு இல்லம் எரிய
அதற்குக் காரணம் ஆன அவளை

இரக்கம் காட்டற் கெதிராய் வைது
கரக்கம் பிதங்கள் காட்டினர் அனைவரும்.

மருதன் வந்துஅவள் மடிந்ததைக் கண்டு
திருதிரு வென்று திகைத்தனன் அழுதான்.

உண்மையில் நெஞ்சுள் உவந்து நின்றான்.
திண்மையில் அவன்கண் தெரிவித் ததுவே.

நடந்தது கேட்டாள் நாரியள் சீதை
தடந்தனில் மருதனைத் தான்சந் தித்து

வருத்தமும் காட்டி வணக்கமும் செய்தாள்.
இருத்தின பேச்சும் இளநகை தனையும்

நிறுத்திப் பார்த்தான், நினைவுறக் காதலிச்
சிறுத்தி இவளே, சீதை இவளே,

கனவோ இதுவெனக் கண்ணை நம்பான்.
நனவே என்று நாட்டம் உறுத்த

இருவரும் உடனுடன் ஏந்திய கையால்
திருவருள் கூட்டின செயலென அறிந்தார்.

ஒன்று சேர்ந்தனர், உமிபிரி நெல்லின்
இன்றை உவமை இவர்க்குரு தாக,

ஒருகுடி யாகி உயர்வுற வாழ்ந்தனர்.
திருவருள் ஓங்க தீங்கெனக் கட்குடி

நாட்டில் ஒழிந்திட நாய்க்கன் ஒழுக்கம்
கூட்டிக் கொண்டனன் குடித்தனம் செய்வதில்.

மருதனும் சீதையும் மாநிலம் போற்றிட
விருதுகள் பெற்று விளங்கி வாழ்ந்தனர்.

## ச. முடிவு.

**32. கவலை பெரிதோ**

**கவலை பெரிதோ வாழ்வு பெரிதோ.**

கவலைவாய்ப் பட்டுக் கண்ணீர் உகுத்த
அவலைதன் வாழ்க்கை அறைந்தனம் இதுவரை.

நற்குணம் அமைந்தும் நாரீ மணியோ
துற்குணப் பெயரால் துயரம் அடைந்தாள்.

வாழ்க்கையில் பன்முறை வாழாச் சங்கடம்
சேர்க்கவும் பெற்றுச் சீரழி வுற்றாள்.

ஏழ்மையில் பிறந்த இயல்போ காரணம்,
தாழ்மையை உற்றது தகுமோ அவட்கு?

பணத்தில் உழன்றும் படிப்பும் பெற்றும்
மணத்தில் சிறந்தும் மலிந்திடும் கவலை,

அதற்குக் காரணம் அறிந்திடல் உண்டோ?
இதற்கும் மேற்கோள் எத்தனை வேண்டும்?

ஏழைக் கண்ணீர் எளிதில் தோன்றும்
மாழைக் கண்கள் மலிந்திடப் பெருக்கும்.

பணத்தினர் ஆனால் பகட்டில் தோன்றா
குணத்தினைக் காட்டும் குறிகள் வெளியுறா.

மேற்பரப் பதிலும் மேற்பூச் சதிலும்
கீழ்கிடப் பவைகள் கிட்டுவ தில்லை.

அந்த முறையில் அடங்கிக் கிடக்கும்
சிந்தைச் செயல்கள் சிறிதும் அறியேம்.

ஏழை யாகிலும் இறையோ னாகிலும்
மாழைக் கவலை மலிதல் உண்டே.

கவலைப் பண்பைக் காட்டும் வடமொழி
நவிலும் அதனைச் சிந்தைச் சொல்லால்.

சிந்தை மொழிக்கும் சிதையெனு மொழிக்கும்
உந்து பேதம் நகர ஒற்றே.

செயலில் வேற்றுமை செறிவது மிகவே.
முயலும் சிந்தை உயிருடன் தகிக்கும்.

சிதையோ உயிரிலா செத்தது தகிக்கும்.
இதையே வடமொழி இயம்பிச் செல்லும்.

இந்த விரிவை இருசொல்லி லேற்றி
சிந்தைச் சொல்லின் சிறப்பை உரைப்பார்.

கவலை அதையே காட்டும் என்க.
அவலம் இட்டும் அனாதை யாக்கியும்

எவனும் எவளும் இகத்திற் கிலராய்
தவறே செலுத்தியும் தான்முன் னிற்கும்

இந்தக் கவலை ஏனோ வந்து
விந்தை வாழ்க்கை விரயம் ஆக்கி

நொந்து மடிய நுழைந்தது என்கோ!
அந்தம் நன்றே ஆகில் சரியோ?

சென்ற நாளின் சிறுமை மறந்து
நின்று தழுவும் நிலையில் மகிழ்தல்

எந்த வகையில் இனிமை ஆகும்!
சிந்தை செய்தே சிந்தை ஒழிப்போம்.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 1530
நன்கொடை எண்: 1530

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல் துறை.

## வேறு நூல்கள்.

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| 1. | கடலின்கண் முத்து அல்லது யான் கண்ட இலங்கை (அரிய பயண நூல்) ... | 3 | 8 | 0 |
| 2. | இதுவோ எங்கள் கோவை (மாணவர்) ... | 2 | 0 | 0 |
| | (கோவை நகர் சரிதம்) உயர்ந்த பதிப்பு ... | 3 | 0 | 0 |
| 3. | எங்கள் நாட்டுப்புறம் (மாணவர்) ... | 2 | 8 | 0 |
| | (அரிய செய்திகள், பாடல்கள்) உயர்ந்தது ... | 3 | 8 | 0 |
| 4. | சிறுகதைத் திரள் (20 சிறு கதைகளும் 5 செய்யுட்களும்) ... | 1 | 0 | 0 |
| 5. | (தமிழ்நாட்டுச்) செயற்கை நலம் (அரிய பணிகள்) ... | 1 | 8 | 0 |
| 6. | கோயிற் பூனைகள் 2-ம் பதிப்பு (நகைச்சுவைக் கதைகள்) ... | 1 | 0 | 0 |
| 7. | சுந்தர மூர்த்தி நாயனாரும் கொங்கு நாடும் (ஆராய்ச்சி நூல்) ... | 0 | 12 | 0 |
| 8. | சிவக்கவிமணி வாழ்க்கைத் திறன் (C. K. S. வரலாறு) ... | 0 | 8 | 0 |
| 9. | கோவை கிழார் வாழ்க்கை வரலாறு ... | 0 | 4 | 0 |
| 10. | இளைஞர் பாடல் (எளிய பாடல்கள்) ... | 0 | 12 | 0 |
| 11. | கொங்குநாட்டுக் கட்டுரைகள் (ஒவ்வொன்றும்) ... | 0 | 2 | 0 |
| 12. | கொங்கு மலர் (பழைய பிரதிகள்) ஒவ்வொரு இதழும் ... | 0 | 2 | 0 |

கிடைக்கும் இடம் :

கோவை நிலையப் பதிப்பகம், லிமிடெட்,

4/89, திருச்சிப் பாதை, கோயமுத்தூர்.